# இலஞ்சச் சட்டம்

(1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டம் உள்ளடங்கலான
எல்லா திருத்தங்களையும் கொண்டுள்ளது)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

## முகவுரை

இலஞ்சச் சட்டத்தின் இந்த மீள்பதிப்பானது 1994 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள எல்லா திருத்தங்களையும் உள்ளடக்கியதாகும். ஆனால், இது உத்தியோகபூர்வ மீள்பதிப்பு இல்லை. வசதிக்காக மட்டுமே பதிப்புசெய்யப்பட்டது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்கான
பணிப்பாளர் நாயகம்

அத்தியாயம் 36

# இலஞ்சம்

**இலஞ்சத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்கும் என ஏற்பாடு செய்வதற்கும் எழுத்திலான வேறு சட்டத்தின் செயற்பாடு தொடர்பில் விளைவாந்தன்மையான ஏற்பாடுகளைச் செய்வதற்குமானவொரு சட்டம்**

*(1954, மாச்சு 1.)*

சட்டங்கள். இல. 1954 இன் 11, 1956 இன் 17, 1958 இன் 40, 1965 இன் 02, 1965 இன் 18, சட்டங்கள் (தே.அ.பே.) இல. 1973 இன் 08, 1974 இன் 38, 1976 இன் 11. சட்டம் இல. 1980 இன் 09, 1994 இன் 20.

*1.* இச்சட்டம் இலஞ்சச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

*2.* (1) *ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தாறாம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையில் உள்ள எதனோடும் முரணாகவுள்ள அல்லது ஒவ்வாததுள்ள இச்சட்டத் தினேற்பாடொவ்வொன்றும், அந்த ஏற்பாடானது, அந்த அரசப் பேரவைக் கட்டளையின் 29 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் காப்புவாசகத்தினால் சுமத்தப்பட்ட தேவைப்பாட்டுக்கிணங்கி யொழுகியதன் பின்னர் அந்த அரச பேரவைக் கட்டளையைத் திருத்துவதற்காகப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்ட — எழுத்திலான ஏனைய சட்டங்களின் செயற்பாட்டில் இச்சட்டம் ஏற்படுத்தும் விளைவு.

---

*1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பினால் நீக்கஞ்செய்யப்பட்டது. அதுவும், 1978 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் நீக்கஞ்செய்யப்பட்டது.



2 –PL 001880 – 1,000 (2007/03)

மொன்றில் இருந்ததென்றாற்போன்று எல்லா நோக்கங்களுக்காகவும், எல்லா அம்சங்களிலும் அத்தகைய செல்லுபடியும் பயனுமுடையதாதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தோடு முரணாகின்றவிடத்து அல்லது ஒவ்வாதிருக்கின்றவிடத்து, இச்சட்டம் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் I

(பி3, 1958 இன் 40)

### இலஞ்சச் சார்த்தல்களை புலனாய்வு செய்தலும், இலஞ்ச வழக்குத் தொடருதலும்

[பி2, 1994 இன் 20]

**2அ.** நீக்கஞ்செய்யப்பட்டது.

[பி2, 1994 இன் 20]

**3.** நீக்கஞ்செய்யப்பட்டது.

[பி2, 1994 இன் 20]

**4.** நீக்கஞ்செய்யப்பட்டது.

[பி2, 1994 இன் 20]

**5.** நீக்கஞ்செய்யப்பட்டது.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தை ஏற்புடையதாக்குதல். [பி4, 1980 இன் 9]

**6.** (1) இச்சட்டத்தின் இரண்டாம் உட்பிரிவினால் விலக்கப்படாதவையான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையான குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழான தவறுகளுக்காக நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறுகளுக்கான நீதிவான் நீதிமன்றத்திலான நடவடிக்கைகளுக்கு குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவு ஏற்புடையதாதலாகாது.

[பி2, 1994 இன் 20]

**7.** நீக்கஞ்செய்யப்பட்டது.

23அ என்னும் பிரிவின்கீழான தவறொன்று தொடர்பில்

**8.** எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்விதமிருப்பினும், இச்சட்டத்தின் 23.அ என்னும் பிரிவின்கீழான தவறொன்று தொடர்பில் இலஞ்சத்துக்கான

குற்றப்பகர்வை விளங்குவதற்கு ஏதேனும் நீதி நிருவாக வலயத்தில் நடாத்தப்படும் மேல்நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கமிருத்தல் வேண்டும்.

இலஞ்சத்துக்கான குற்றப்பகர்வை விளங்குவதற்கான நியாயாதிக்கம்.
[பி6, 1980 இன் 9]
[பி7, 1980 இன் 9]
[பி2, 1994 இன் 20]

9. நீக்கஞ்செய்யப்பட்டது. [பி7, 1980 இன் 9]

10. நீக்கஞ்செய்யப்பட்டது. [பி2, 1994 இன் 20]

11. இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக ஆள் ஒருவரின் விளக்கத்தில் நீதிமன்றம் அல்லது வழக்குத்தொடுக்குநர் எழுத்திலான வேறு சட்டம் எதிலும் அதற்கு முரணானது எது எவ்வாறிருப்பினும் சாட்சிகள் அல்லது காண்பி பொருட்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டிராத அத்தகைய எவரேனும் சாட்சியை அழைக்கலாம் அல்லது அத்தகைய ஏதேனும் ஆவணத்தைப் பயன்படுத்தலாம் அல்லது காண்பிக்கலாம்.

குற்றப்பகர்வில் குறித்துரைக்கப்படாத சாட்சிகளை அழைத்தலும் ஆவணங்களைப் பயன்படுத்தலும் காண்பித்தலும்.
[பி. 8, 1965 இன் 2]
[பி9, 1980 இன் 9]

12. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட சாட்சிகள்மீது அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கும் முறையோடு சேர்த்து மேலதிகமாகப் பின்வரும் முறையில் இலஞ்சத்துக்கான நீதிமன்ற நடவடிக்கைகளில் எவரேனும் ஆளின்மீது விடுக்கப்படும் அழைப்புக்கட்டளைகள் சேர்ப்பிக்கப்படலாம் :—

இலஞ்சத்துக்கான ஏதேனும் நீதிமன்ற நடவடிக்கைகளில் விடுக்கப்படும் அழைப்பாணையைச் சேர்ப்பிக்கும் முறை.
[பி8, 1965 இன் 2]
[பி10, 1980 இன் 9]

(அ) அழைக்கப்படவுள்ள ஆளுக்கு முகவரியிடப்பட்டு விரைவஞ்சலாக அனுப்பப்படும் பதிவுக்கடிதமூலம் ; அல்லது

(ஆ) பகிரங்க சேவையாளர் ஒருவரின் விடயத்தில், அத்தகைய பகிரங்க சேவையாளர் தொழிலிற்கமர்த்தப்பட்டுள்ள திணைக்களத்தின், அலுவலகத்தின் அல்லது தாபனத்தின் தலைவருக்கு முகவரியிட்டு விரைவஞ்சலாக அனுப்பப்படும் பதிவுக்கடிதமூலம் ; அல்லது

(இ) வேறு எவரேனும் ஆளின்கீழ் வேலைசெய்யும் எவரேனும் ஆளின் விடயத்தில், அந்தத் தொழில் தருநருக்கு முகவரியிட்டு விரைவஞ்சலாக அனுப்பப்படும் பதிவுக்கடிதமூலம் ; அல்லது

(ஈ) எவரேனும் கிராமசேவை அலுவலர்மூலம் ; அல்லது

(உ) அவசரமான சந்தர்ப்பங்களில் தந்திமூலம்.

[பி12, 1958இன் 40] **13.** நீக்கஞ்செய்யப்பட்டது.

## பாகம் II

### இலஞ்சத் தவறுகள்

நீதித்துறை அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் இலஞ்சம்.

**14.** ஆளொருவர்

(அ) நீதித்துறை அலுவலரொருவருக்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கு, அத்தகைய அலுவலர் அல்லது உறுப்பினர் அவரது நீதித்துறை சார்ந்த தன்மையில் அல்லது அத்தகைய உறுப்பினர் என்ற தன்மையில் ஏதேனும் செயலைச் செய்வதற்கான அல்லது செய்யாதிருப்பதற்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைக் கொடுக்க முனையின், அல்லது

(ஆ) நீதித்துறை அலுவலராக அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு அவரது நீதித்துறை சார்ந்த தன்மையில் அல்லது அத்தகைய உறுப்பினர் என்ற அவரது தன்மையில் ஏதேனும் செயலைச் செய்வதற்கான அல்லது செய்யாதிருப்பதற்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைப் பரிந்து கேட்பின் அல்லது ஏற்பின் -

[பி. 9, 1965 இன் 2]
[பி. 2, 1956 இன் 17]

ஏழாண்டுகட்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எப்படியிருப்பினும், ஏதேனும் தொழிற்சங்கம் அல்லது வேறு அமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்க்கு தனியே அவரின் பராமரிப்பு நோக்கங்களுக்கென ஏதேனும் படித்தொகையை

அல்லது வேறு கொடுப்பனவைக் கொடுக்கமுனைதலோ அத்தகைய உறுப்பினர் ஏதேனும் தொழிற்சங்கத்திடமிருந்து அல்லது வேறு அமைப்பிலிருந்து அதனை ஏற்றலோ இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்த்தவறொன்றாதலாகாது.

பகிரங்க சேவையாளர்களைச் செவ்வி காண்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் அவாநிறைவை ஏற்றல்.

**15.** பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் -

(அ) எவரேனும் ஆளின் சார்பில் பகிரங்க சேவையாளர் ஒருவரைத் தாம் செவ்வி காண்பதற்காக, அல்லது

(ஆ) எவரேனும் ஆளின் சார்பில் நீதித்துறைப் பணிபுரியும் அல்லது நீதித்துறைப் பணியைப் போன்ற பணியைப் புரியும் ஒரு பகிரங்க சேவையாளர் முன்னிலையில் தோன்றுவதற்காக -

ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற முறையில் ஏதேனும் அவாநிறைவைப் பரிந்துகேட்டால் அல்லது ஏற்றால், ஏழாண்டுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடுழிய மறியற்றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். [பி. 9, 1965 இன் 2]

ஆயின், எப்படியிருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தின் முன்னர் அல்லது பகிரங்கசேவையாளர் உறுப்பினராயில்லாத நியதிச்சட்ட நியாயசபை முன்னர் சட்டத்தரணியொருவராக தோன்றுதல் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்த் தவறொன்றாதலாகாது.

பொலிசு அலுவலர்கள், சமாதான அலுவலர்கள் அத்துடன் வேறு பகிரங்க சேவையாளரின் இலஞ்சம்.

**16.** ஆளொருவர் -

(அ) தவறாளர்கள்மீது வழக்குத் தொடருதல், அவர்களைக் கண்டுபிடித்தல் அல்லது அவர்களைத் தண்டித்தலுக்காக எத்தன்மையிலேனும் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும் எவரேனும் பொலிசு அலுவலருக்கு அல்லது சமாதான அலுவலருக்கு அல்லது வேறு பகிரங்க சேவையாளருக்கு அல்லது நீதிமன்றமொன்றின் அலுவலருக்கு, அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் நீதிநெறிமுறையில் நிருவகிக்கப்படுவதில்

தலையிடுவதற்காக அல்லது தவறெதுவும் புரியப்படச் செய்வதற்காக அல்லது புரியப்படுவதைச் சுலபமாக்குவதற்காக அல்லது ஏதேனும் தவற்றை இழைத்தவர் கண்டுபிடிக்கப்படுவதிலிருந்து அல்லது தண்டிக்கப்படுவதிலிருந்து அவரைக் காப்பாற்றுவதற்காக, அல்லது எவரேனும் ஆளுக்கு ஊறுவிளைவிக்கும் வண்ணம் அல்லது கேடாகும்வண்ணம் தமது அலுவலகத் தத்துவங்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்காக, ஊக்குதல் என்றவகையில் அல்லது வெகுமதி என்றவகையில் ஏதேனும் அவாநிறைவைக் கொடுக்கமுனையின் ; அல்லது

(ஆ) அத்தகைய அலுவலராய் அல்லது சேவையாளராய் இருந்துகொண்டு, இப்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய தலையீட்டுக்காக, செய்விப்பதற்காக, சுலபமாக்குவதற்காக காப்பாற்றுவதற்காக அல்லது துஷ்பிரயோகம் செய்வதற்காக ஊக்குதல் அல்லது வெகுமதி என்றவகையில் அவாநிறைவு எதையும் பரிந்துகேட்டால் அல்லது ஏற்றால்,

[பி. 9, 1965 இன் 2]

ஏழாண்டுகட்கு மேற்படாத ஒருகாலத்துக்கான கடுழிய மறியற்றண்டனையாலும், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் தொடர்பில் உதவிதருவதற்காக அல்லது செல்வாக்குப் பயன்படுத்துவதற்காக இலஞ்சம்.

**17.** ஆளொருவர் -

(அ) ஏதேனும் வேலைசெய்தலுக்கான, ஏதேனும் சேவை ஏற்பாடு செய்தலுக்கான, எதையேனும்செய்தலுக்கான, ஏதேனும் பொருள், சாமான் அல்லது பதார்த்தம் வழங்குதலுக்கான அரசாங்கத்துடனான ஏதேனும் ஒப்பந்தத்தைப் பெறுவதை மேம்படுத்துவதில் அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விலையை அல்லது பிரதிபயனை அல்லது அதுதொடர்பிற் கொடுபடற்பாலதான ஏதேனும் மானியத்தொகையைக் கொடுப்பதில் பகிரங்க சேவையாளர் ஒருவர் உதவிதருவதற்கான அல்லது செல்வாக்குப் பயன்படுத்துவதற்கான ஊக்குதல் என்றவகையில் அல்லது வெகுமதி என்றவகையில் அத்தகைய பகிரங்கசேவையாளருக்கு ஏதேனும் அவாநிறைவைக் கொடுக்கமுனையின் ; அல்லது

(ஆ) பகிரங்க சேவையாளராய் இருந்துகொண்டு, இப் பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப் பட்டதான அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தைப் பெறுவதை மேம்படுத்துவதில் அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அல்லது அதன்கண் குறிப்பிடப்பட்ட விலையை அல்லது பிரதி பயனை அல்லது அது தொடர்பிற் கொடுபடற்பால தான மானியத்தொகையைக் கொடுப்பனவுசெய்வதில் உதவிசெய்வதற்கான அல்லது செல்வாக்குப் பயன் படுத்துவதற்கான ஊக்குதல் என்றவகையில் அல்லது வெகுமதி என்றவகையில் ஏதேனும் அவாநிறைவைப் பரிந்துகேட்டால், அல்லது ஏற்றால்,

ஏழாண்டுகட்கு மேற்படாதவொருகாலத்துக்கான மறியற்றண் டனையினாலும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும். [பி. 9, 1965 இன் 2]

கேள்விப் பத்திரங்கள் திருப்பிப் பெறப்படச் செய்வதற்கான இலஞ்சம்.

**18.** ஆளொருவர் -

(அ) ஏதேனும் வேலைசெய்வதற்கான, ஏதேனும் சேவை ஏற்பாடுசெய்வதற்கான, எதையேனும் செய்வதற்கான அல்லது ஏதேனும் பொருள், சாமான் அல்லது பதார்த்தம் வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றை அரசாங்கத்திடமிருந்து பெறும் கருத்துடன், அத்தகைய ஒப்பந்தத்துக்கென கேள்விப்பத்திரம் சமர்ப்பித்துள்ள எவரேனும் ஆளுக்கு, அவர் அத்தகைய கேள்விப் பத்திரத்தைத் திருப்பிப்பெறுவதற்கான ஊக்குதல் அல்லது வெகுமதி என்றவகையில் ஏதேனும் அவாநிறைவைக் கொடுக்கமுனையின், அல்லது

(ஆ) அத்தகைய ஒப்பந்தத்துக்காக அவரால் சமர்ப்பிக்கப் பட்ட கேள்விப்பத்திரத்தை அவர் திரும்பப் பெறுவதற் காக ஊக்குதல் அல்லது வெகுமதி என்றமுறையில் ஏதேனும் அவாநிறைவை அவர் பரிந்துகேட்டால் அல்லது ஏற்றால்,



2—

ஏழாண்டுகட்கு மேற்படாத ஒருகாலத்துக்கான கடூழிய மறியற் றண்டனையாலும், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

[பி. 9, 1965இன் 2]

அரசாங்க அலுவல்கள் தொடர்பில் இலஞ்சம்.

**19.** ஆளொருவர் -

(அ) பகிரங்க சேவையாளர் ஒருவருக்கு அந்தப் பகிரங்க சேவையாளர் ஏதேனும் அலுவலகச் செயலை புரிவதற்காக அல்லது புரிவதை தடுப்பதற்காக அல்லது ஏதேனும் அலுவலகச் செயலை அத்தகைய பகிரங்கச் சேவையாளராலோ வேறெவரேனும் பகிரங்க சேவையாளராலோ புரியப்படுதலைத் துரிதப்படுத்துவதற்கான, சுணக்குவதற்கான தடைசெய்வதற்கான அல்லது தடுப்பதற்கான அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் அலுவலை அரசாங்கத்துடன் செய்துகொள்வதற்கு உதவுவதற்கான, அனுகூலம் காட்டுவதற்கான, தடைசெய்வதற்கான அல்லது சுணக்குவதற்கான ஊக்குதல் அல்லது வெகுமதி என்றவகையில் ஏதேனும் அவாநிறைவைக் கொடுக்க முனைந்தால் ; அல்லது

(ஆ) பகிரங்க சேவையாளர் ஒருவராய் இருந்துகொண்டு, ஏதேனும் அலுவலகச் செயலை அவர் புரிவதற்கான அல்லது புரியாதுவிடுவதற்கான அல்லது இப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டதான அத்தகைய துரிதப்படுத்துவதற்கான, சுணக்குவதற்கான, தடைசெய்வதற்கான, தடுப்பதற்கான, உதவுவதற்கான அல்லது அனுகூலம்காட்டுவதற்கான ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற முறையில் ஏதேனும் அவாநிறைவைப் பரிந்து கோரினால் ; அல்லது ஏற்றால் அல்லது

[பி. 8, 1974இன் 38]

(இ) பகிரங்க சேவையாளரொருவராய் இருந்துகொண்டு, ஏதேனும் அவாநிறைவை பரிந்துகோரினால் அல்லது ஏற்றால் -

ஏழாண்டுகட்கு மேற்படாத ஒருகாலத்துக்கான கடூழிய மறியற் றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்

[பி. 9, 1965 இன் 2]

[பி. 8, தே.அ.பே. 1974 இன் 38]

ஆயின், எப்படியிருப்பினும், பகிரங்க சேவையாளரொருவர், சட்டப்படி அல்லது அவரது தொழில் நியதிகளின்படி பெற

வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அவாநிறைவைப் பரிந்து கோருதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல், தவறொன்றாதலாகாது

ஆயின், மேலும் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவு, பகிரங்க சேவையாளரொருவராகவிருக்கின்ற மருத்துவத் தொழிலர் ஒருவர் அவாநிறைவெதனையும் பரிந்துகோருத்லுக்கோ அல்லது ஏற்றுக்கொள்ளுதலுக்கோ அவரை உரித்துடையவராக ஆக்குதலாகாது. [பி. 11, 1980 இன் 9]

கோரிக்கைகளைக் கொடுப்பனவு செய்தல் நியமனங்கள், தொழில்கள், அளிப்புகள் குத்தகைகள் வேறு நன்மைகள் தொடர்பிலான இலஞ்சம்.

**20.** ஆளொருவர் -

(அ) எவரேனும் ஆளுக்கு -

(i) அவர் ஏதேனும் கோரிக்கையின் முழுமையையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியை அரசாங்கத் திடமிருந்து பெற்றுக்கொடுப்பதற்கான ; அல்லது

(ii) முதற்குறிப்பிடப்பட்ட ஆள் அல்லது வேறெவரேனும் ஆள் ஏதேனும் பதவிக்கு நியமனம் பெறச் செய்வதற்கான அல்லது அதனை மேற்கொண்டு செல்வதற்கான ; அல்லது

(iii) வேறெவரேனும் ஆள் ஏதேனும் பதவிக்கு நியமிக் கப்படுதலை அவர் தடுப்பதற்கான ; அல்லது

(iv) முதற்குறிப்பிட்ட ஆளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அரசாங்கத்தின் ஏதேனும் திணைக் களத்தில் அலுவலகத்தில் அல்லது தாபனத்தில் அவர் ஏதேனும் தொழில் பெற்றுத் தருவதற்கான அல்லது பெறுதலை மேற்கொண்டு செல்வதற் கான ; அல்லது

(v) வேறு எவரேனும் ஆளுக்கு அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தில், அலுவலகத்தில் அல்லது தாபனத்தில் ஏதேனும் தொழில் பெறப்படுதலைத் தடுப்பதற்கான ; அல்லது

(vi) முதற்குறிப்பிட்ட ஆளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அரசாங்கத்திடமிருந்து ஏதேனும் அளிப்பை குத்தகையை அல்லது வேறு நன்மையை அவர் பெற்றுத்தருவதற்கான அல் லது பெறுதலை மேற்கொண்டு செல்வதற்கான ; அல்லது

(vii) அத்தகைய ஏதேனும் அளிப்பு குத்தகை அல்லது நன்மை வேறு எவரேனும் ஆளுக்குப் பெறப் படுதலை அவர் தடுப்பதற்கான.

ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற முறையில் ஏதேனும் அவாநிறைவைக் கொடைமுனைந்தால் ; அல்லது

(ஆ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i), (ii), (iii), (iv), (v), (vi), (vii) என்னும் உட்பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலை அவர் செய்வதற்கான ஊக்குதல் அல்லது வெகுமதி என்றமுறையில் ஏதேனும் அவாநிறைவைப் பரிந்துகேட்டால் அல்லது ஏற்றால் -

[பி. 9, 1965 இன் 2]

ஏழாண்டுகட்கு மேற்படாத ஒருகாலத்துக்கான கடூழிய மறியற்றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அரசாங்கத்தோடு தொடர்புகள் உள்ள ஆட்கள் பகிரங்க சேவையாளருக்கு இலஞ்சம் கொடுத்தல்.

**21.** ஆளொருவர் —

(அ) அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தின்மூலம் அரசாங்கத்துடன் எத்தகையனவுமான கொடுக்கல், வாங்கல்களை வைத்திருக்கும் போது அந்தத் திணைக்களத்தில், அலுவல கத்தில் அல்லது தாபனத்தில் தொழிற்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பகிரங்க சேவையாளருக்கு ஏதேனும் அவாநிறைவைக் கொடை முனைந்தால் ; அல்லது

(ஆ) அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தின்மூலம் அரசாங்கத்துடன் எத்தகையதுமான கொடுக்கல், வாங்கல்களைக் கொண்டிருத்தற்கு முன்னர் அல்லது பின்னர் ஓராண்டு காலத்துள் அந்தத் திணைக்களத்தில், அலுவலகத்தில் அல்லது தாபனத்தில் தொழிற்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பகிரங்க சேவையாளருக்கு ஏதேனும் அவாநிறைவைக் கொடை முனைந்தால் ; அல்லது

(இ) பகிரங்க சேவையாளராக இருந்துகொண்டு எந்த அவாநிறைவைக் கொடைமுனைதல் இந்தப் பிரிவின்கீழ்த் தவறாயுள்ளதோ அத்தகைய ஏதேனும் அவாநிறைவைப் பரிந்து கேட்டால் அல்லது ஏற்றால்,

[பி. 9, 1965 இன் 2]

ஏழாண்டுகட்கு மேற்படாத ஒருகாலத்துக்கான கடூழிய மறியற்றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எப்படியிருப்பினும், இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டதான பகிரங்க சேவையாளருக்கான அத்தகைய அவாநிறைவொன்றின் கொடை முனைவு அந்தப் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய கொடுக்கல் வாங்கல்களோடு தொடர்பில்லாததும் சம்பந்தப்படாததுமான நோக்கத்துக்காக நல்லெண்ணத்துடன் கொடைமுனையப்பட்ட தென்றும், அந்த அவாநிறைவைக் கொடைமுனைந்த நேரத்தில் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை வைத்திருக்க நம்பியிருக்க வில்லை அல்லது எதிர்பார்த்திருக்கவில்லையென்றும் அல்லது அத்தகைய அவாநிறைவானது, அத்தகைய எவையேனும் கொடுக்கல் வாங்கல்களோடு தொடர்புபட்ட அல்லது சம்பந்தப் பட்ட ஏதேனும் செயலை அந்தப் பகிரங்க சேவையாளர் செய்வ தற்கான அல்லது செய்யாதிருப்பதற்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக இருக்க வேண்டுமென்று தாம் கருத்துக் கொண்டி ருக்கவில்லையென்றும் கொடைமுனைந்தவர் எண்பித்தால் அக்கொடைமுனைவு இப்பிரிவின்கீழான தவறொன்றாதலாகாது.

உள்ளூரதிகாரசபை உறுப்பினருக்கு அல்லது அட்ட வணைப்படுத்தப் பட்ட நிறுவன உறுப்பினருக்கு அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் உறுப்பினருக்கு ஆன இலஞ்சமும் உள்ளூரதிகார சபையின் அல்லது அத்தகைய நிறுவனத்தின் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு ஆன இலஞ்சமும்.

22. ஆளொருவர் –

(அ) உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு –

(i) அத்தகைய உறுப்பினர், அத்தகைய உள்ளூரதி காரசபையின், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறு வனத்தின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் அல்லது அதன் குழுவொன்றின் ஏதேனும் கூட்டத்தில், அத்த கைய உள்ளூரதிகாரசபையிடம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்திடம் அல்லது ஆளுங் குழுவிடம் அல்லது குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, தீர்மானம் அல்லது பிரச்சினைக்குச் சாதகமாக அல்லது பாதகமாக வாக்களிப்பதற்கான அல்லது அதற்கு வாக்களி யாதிருப்பதற்கான ; அல்லது

(ii) ஏதேனும் அலுவலகச் செயலை அத்தகைய உறுப்பினர் செய்வதற்கான அல்லது செய்யாதிருப்பதற்கான அல்லது அச்செயலைப் புரியப்படச் செய்விப்பதற்கு, துரிதப்படுத்துவதற்கு, சுணங்குவதற்கு, தடைசெய்வதற்கு அல்லது தடுப்பதற்கு உதவுவதற்கான ; அல்லது

(iii) ஏதேனும் வாக்குநிறைவேற்றப்படலை அல்லது எவரேனும் ஆள்சார்பில் ஏதேனும் ஒப்பந்தம் அல்லது அனுகூலம் வழங்கப்படுதலைச் செய்விப்பதில் அல்லது தடுப்பதில் அவ்வுறுப்பினர் உதவி செய்வதற்கான,

ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைக் கொடைமுனைந்தால் ; அல்லது

(ஆ) ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு –

(i) அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் ஏதேனும் அலுவலகச் செயலைச் செய்வதற்கான அல்லது செய்யாதிருபதற்கான அல்லது அச்செயலை புரியப்படுதலைச் செய்விப்பதற்கு, துரிதப்படுத்துவதற்கு, சுணங்குவதற்கு, தடைசெய்வதற்கு அல்லது தடுப்பதற்கு உதவுவதற்கான ; அல்லது

(ii) அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர், ஏதேனும் வாக்கு நிறைவேற்றப்படவில்லை அல்லது எவரேனும் ஆள்சார்பில் ஏதேனும் ஒப்பந்தம் அல்லது அனுகூலம் வழங்கப்படுதலைச் செய்விப்பதற்கு அல்லது தடுப்பதற்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைக் கொடைமுனைந்தால் ; அல்லது

(இ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவரான அத்தகைய உறுப்பினராயிருந்து கொண்டு, அப்பந்தியின் (i), (ii), (iii) ஆகிய உட்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்டனவான அத்தகைய ஏதேனும் செய்கைக்கான அல்லது செய்யாது விடுதலுக்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைப் பரிந்துகேட்டால் அல்லது ஏற்றால்; அல்லது

(ஈ) இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவரான அத்தகைய அலுவலராக அல்லது ஊழியராக இருந்துகொண்டு, அந்தப் பந்தியின் (i), (ii) ஆகிய உட்பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்டதான அத்தகைய ஏதேனும் செய்கைக்கான அல்லது செய்யாது விடுதலுக்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைப் பரிந்துகேட்டால் அல்லது ஏற்றால்,

ஏழாண்டுகளுக்கு மேற்படாத ஒருகாலத்துக்கான கடூழிய மறியற்றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். [பி.9, 1965, இன் 2.]

உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் உறுப்பினர் வாக்களிப்பதில் செல்வாக்குப் பிரயோகிப்பதற்காக அச்சுறுத்துதல் அல்லது மோசடி செய்தல்.

**23.** (அ) ஓர் உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுததப்பட்ட நிறுவனமொன்றின் ஆளுங்குழுவின் உறுப்பினர் எவரேனும் அத்தகைய உள்ளூரதிகாரசபையின் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் அல்லது அதனொருகுழுவின் ஏதேனும் கூட்டத்திற் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை பிரேரணை, தீர்மானம் அல்லது பிரச்சினைக்கு சாதகமாக அல்லது பாதகமாக வாக்களித்தலில் அல்லது அளிக்காது விடுதலில் அல்லது ஏதேனும் கூட்டத்துக்குச் சமுகமளியாதிருத்தலில் ஏதேனும் அச்சுறுத்தல் ஏமாற்றுதல் உண்மையை மறைத்தல் அல்லது வேறு சட்டவிரோதமான வழிகள்மூலம் தமது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனிக்கும் ; அல்லது

(ஆ) ஓர் உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் ஏதேனும் வாக்கு நிறைவேற்றப்படுதலை அல்லது எவரேனும் ஆள் சார்பில் ஏதேனும் ஒப்பந்தம் அல்லது அனுகூலம் வழங்கப்படுதலைச் செய்விப்பதில் அல்லது தடுப்பதில் உதவும் வண்ணம் அல்லது ஏதேனும் அலுவலகச் செயலைச் செய்யும் வண்ணம் அல்லது செய்யாதிருக்கும் வண்ணம் அல்லது ஏதேனும் அலுவலகச் செயல் செய்யப்படுவதற்கு துரிதப்படுத்துவதற்கு சுணக்குவதற்கு, தடைசெய்வதற்கு அல்லது தடுப்பதற்கு உதவும் வண்ணம் முற்போந்த கடைசிப்பந்தியிற் குறிப்பிடப்பட்டனவான அத்தகைய எவையேனும் முறைகளில் செல்வாக்குப் பிரயோகிக்க எத்தனிக்கும் ,

[பி. 9, 1965 இன் 22.]

ஆளொருவர் ஏழாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனையாலும், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இலஞ்சத்தின் மூலம் கொள்ளப்பட்ட ஆதனமாக அல்லது இலஞ்சத்தின்மூலம் கொள்ளப்பட்ட ஆதனமாயிருந்து வேறொன்றாக மாற்றப்பட்டிருக்கின்ற அல்லது மாற்றப்பட்டுள்ள ஆதனமாக இப்பிரிவின் கீழ்க் கருதப்படும் ஆதனத்தின் சொந்தக்காரராயிருத்தல் அல்லது இருந்திருத்தல் தவறொன்றாதல்.

[பி.14, 1958 இன் 40. ]

23அ. (1) ஆளொருவர், 1954, மாச்சு 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஏதேனும் ஆதனத்தைக் கொள்வனை செய்திருக்கின்றவிடத்தும் அல்லது கொள்வனை செய்திருந்தவிடத்து அத்தகைய ஆதனம் –

(அ) பணமாயிருந்து –

(i) அவரது அறியப்பட்ட வருமானத்தின் அல்லது வரவுகளின் பாகமாக இருக்க முடியாதவிடத்து அல்லது இருந்திருக்க முடியாதவிடத்து ; அல்லது

(ii) அறியப்பட்ட அவரது வரவுகளின் ஏதேனும் பாகமானது மாற்றப்பட்டிருக்கும் அல்லது மாற்றப்பட்டுள்ள பணமாக இருக்கமுடியாதவிடத்து அல்லது இருந்திருக்க முடியாதவிடத்து ; அல்லது

(ஆ) பணமல்லாத ஆதனமாயிருந்து —

(i) அறியப்பட்ட அவரது வருமானத்தின் ஏதேனும் பாகத்தைக் கொண்டு கொள்ளப்பட்ட ஆதனமாக இருக்க முடியாதவிடத்து அல்லது இருந்திருக்கமுடியாதவிடத்து ; அல்லது

(ii) அறியப்பட்ட அவரது வரவுகளின் பாகமாயுள்ள அல்லது பாகமாயிருந்த ஆதனமாக இருக்க முடியாதவிடத்து அல்லது இருந்திருக்க முடியாத விடத்து ; அல்லது

(iii) அறியப்பட்ட அவரது வரவுகளின் ஏதேனும் பாகம், மாற்றப்பட்டிருக்கும் அல்லது மாற்றப்பட்டுள்ள ஆதனமாக இருக்கமுடியாதவிடத்து அல்லது இருந்திருக்கமுடியாத விடத்து,

அப்போது, இப்பிரிவின்கீழான ஏதேனும் குற்ற வழக்கின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஆதன மானது, அவரால் இலஞ்சத்தின்மூலம் கொள்ளப் பட்டிருக்கிற அல்லது கொள்ளப்பட்ட ஆதனமாக இருக்கிறது அல்லது இருந்தது என்று அல்லது இலஞ்சத்தின் மூலம் அவர் கொண்ட ஆதனத்தை அவர் வேறொன்றாக மாற்றியிருக்கின்ற அல்லது மாற்றிய ஆதனமாக இருக்கின்றது அல்லது இருந்தது என்று, முரணானது அவரால் எண்பிக்கப்பட்டாலொழிய, கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின் "வருமானம்" என்பது, இலஞ்சத்தின் மூலம்பெறப்பட்ட வருமானத்தை உள்ளடக்காது, அத்துடன் "வரவுகள்" என்பது, இலஞ்சத்தின்மூலம் பெறப்பட்ட வரவுகளை உள்ளடக்காது.

(3) இலஞ்சத்தின்மூலம் கொள்ளப்பட்டிருக்கின்ற அல்லது கொள்ளப்பட்ட ஆதனம் என அல்லது இலஞ்சத்தின்மூலம் அவர் கொண்ட

ஏதேனும் ஆதனத்தை அவர் வேறொன்றாக மாற்றியிருக்கின்ற அல்லது மாற்றியுள்ள ஆதனம் என (1) ஆம் உட்பிரிவின்கீழ் கருதப்படும் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரராய் இருக்கின்ற அல்லது இருந்த ஆள் ஒருவர் ஏழாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடுழிய மறியற்றண்டனையாலும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படற்கூடிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

[பி.10, 1965 இன் 2]

ஆயின், அத்தகைய ஆதனம் ஏதேனும் வங்கியில் அத்தகைய ஆளின் கணக்கில் வைப்பாக வைக்கப்பட்ட பணமாக இருக்கின்றவிடத்தும் அல்லது இருந்தவிடத்தும், அத்தகைய வைப்பானது அவரது சம்மதமோ அறிவோ இன்றி வேறெவரேனும் ஆளினால் இடப்பட்டிருக்கின்றது அல்லது இடப்பட்டிருந்தது என்று நீதிமன்றத்தை அவர் திருப்திப்படுத்துகின்றவிடத்தும் அவர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது.

(4) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கு எதுவும், அத்தகைய தவறுக்காக அத்தகைய ஆளுக்கெதிராக ஏன் குற்றவழக்குத் தொடுக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படி அத்தகைய ஆளுக்குச் சந்தர்ப்பம் ஒன்றை இலஞ்ச ஆணைக்குழு கொடுத்திருந்து அவர் காரணம் காட்டத் தவறினாலன்றி அல்லது அவராற் காட்டப்பட்ட காரணம் அத்தகைய ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி திருப்தியற்றவொன்றாகவிருந்தாலன்றி, எவரேனும் ஆளுக்கெதிராகத் தொடுக்கப்படுதலாகாது.

[பி.3, 1994 இன் 20]

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவரின் வாழ்க்கைத்துணை அல்லது பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட திருமணமாகாத பிள்ளை, 1954, மாச்சு 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல் செய்கின்றவிடத்தும் அல்லது கொள்ளுதல் செய்திருந்தவிடத்தும்,

[பி.9, 1974 இன் 38]

அத்தகைய ஆதனம், விடயத்துக்கேற்ப அத்தகைய வாழ்க்கைத் துணையினால் அல்லது திருமண மாகாத பிள்ளையினால் அல்லாது மேற்கூறப்பட்ட அத்தகைய ஆளினாலேயே கொள்ளுதல் செய்யப் பட்டதென்று முரணாக எண்பிக்கப்படும்வரை ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்குத்தொடுப்பில், ஏதேனும் அசைவற்ற ஆதனத்தில் பெறுமதி தொடர்பிலும் அல்லது அத்தகைய ஆதனத்தில் உள்ள ஏதேனும் கட்டடத்தின் நிர்மாணச் செலவு தொடர்பிலும் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழானது, முரணானதென்று எண்பிக் கப்பட்டாலன்றியும், முரணானதென எண்பிக்கப் படும்வரையும், அத்தகைய பெறுமதி, நிருமாணச் செலவு என்பன பற்றிய போதுமான எண்பிப்பு ஆதல் வேண்டும். [பி.12, 1980 இன் 9]

இந்த உட்பிரிவில், "பிரதம விலைமதிப் பீட்டாளர்" என்பது, அரசாங்கத்தின் பிரதம விலைமதிப்பீட்டாளர் எனப் பொருளாவதுடன் அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் எவரேனும் சிரேஷ்ட உதவி விலைமதிப்பீட்டாளரை அல்லது உதவி விலைமதிப்பீட்டாளரை உள்ள டக்கும்.

(7) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, "ஆளொருவர்" என்பது, 18 ஆம் பிரிவில் அல்லது 20 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலுடன் அத்தகைய ஆள் தொடர்புபட்டிருந் தாரெனக் காட்டக்கூடியதாயிருப்பினும் சரி அல்ல வாயினும்சரி அலலது இச்சட்டத்தின் கருத்தெல் லைக்குள் அவர் ஒரு பகிரங்க சேவையாளனா யிருப்பினும்சரி அல்லவாயினும்சரி எத்தன்மை யினரான எவரேனும் ஆள் எனப் பொருளாதல் வேண்டும். [பி.12, 1980 இன் 9]

நோக்கமானது நிறைவேற்றப்படாவிடினும் அவாநிறைவை ஏற்றவர் குற்றவாளியாய் இருத்தல் முதலியன.

**24.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் ஏதேனும் பிரிவின்கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் நடவடிக்கையின்போது அத்தகைய பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயலை அவர் செய்வதற்காக அல்லது செய்யாது தவிர்வதற்காக பிரதிபயனாக அவாநிறைவு கொடைமுனையப் பட்டது என்று அவர் நம்புவதற்கு அல்லது சந்தேகப்படுவதற்கு ஏது இருக்கத்தக்கதாக அவர் ஏதேனும் அவாநிறைவை ஏற்றார் என்பது எண்பிக்கப்படுகின்றவிடத்து, அவர், அவ்வாறு செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்வதற்குத் தத்துவமோ உரிமையோ சந்தர்ப்பமோ கொண்டவராக உண்மையில் இருக்கவில்லையென்பது அல்லது அவ்வாறு செய்வதற்கான செய்யாது தவிர்வதற்கான கருத்தில்லாமல் அந்த அவாநிறைவை அவர் ஏற்றார் என்பது அல்லது அவர் அவ்வாறு செய்யவில்லை அல்லது செய்யாது தவிரவில்லை என்பது எப்படியிருப்பினும், அப்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பாகத்தின் கீழான தவறொன்றைப் புரிய எத்தனித்தலும், உடந்தையாயிருத்தலும்.

**25.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான ஒரு தவறினைப் புரிய அல்லது புரிவிக்க எத்தனித்து அத்தகைய எத்தனத்தில் அத்தகைய தவறு புரியப்படுதலுக்கான ஏதேனும் செயலைச் செய்யும் ஓர் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு, முதற்கூறப்பட்ட தவறுக்கென இச்சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட அதேவிதத்தில் விளங்கப்படவும், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான தவறொன்றுக்கு உடந்தையாக இருக்கும் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு, முதற்கூறப்பட்ட தவறுக்கென இச் சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட அதேவிதத்தில் விளங்கப்படவும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். இந்த உட்பிரிவில் "உடந்தை" என்ற சொல்லமைப்பு தண்டனைச் சட்டக்கோவையின், 100 ஆம், 101 ஆம் பிரிவுகளில் உள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

[பி.10, 1974 இன் 38]

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான ஒரு தவறைப் புரிவதற்கு வேறெவரேனும் ஆளுடன் சதி செய்யும் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, அவர், முதலாவதாகக் கூறப்பட்ட தவறுக்கென இச்சட்டத்தால் விதிக்கப்பட்டவாறான அதேமுறையில் விளங்கப்படுதலும்,

குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அதே தண்டனைக்காளாதலும் வேண்டும். இந்த உட்பிரிவில் "சதிசெய்தல்" என்ற சொல்லமைப்பு தண்டனைச் சட்டக்கோவையின் 113அ என்னும் பிரிவிலுள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

*26*. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறி ஏதேனும் அவாநிறைவை ஏற்பதன் மூலம் இழைக்கப்படும் ஒரு தவறுக்காக எவரேனும் ஆளுக்கு ஒரு நீதிமன்றம் குற்றத்தீர்ப்பு அளிக்கின்றவிடத்து, அப்போது அந்த அவாநிறைவு பணத் தொகையாக இருப்பின் அல்லது அந்த அவாநிறைவின் பெறுமதி மதிப்பிடக் கூடியதாக இருப்பின், நீதிமன்றம் அந்த ஆளுக்கு விதிக்கும் ஏதேனும் வேறு தண்டனையோடு சேர்த்து, மேலதிகமாக, அத்தகைய அவாநிறைவுத் தொகைக்குச் சமமான ஒரு தொகையை அல்லது நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அந்த அவாநிறைவின் பெறுமதியாகவுள்ள தொகையைக் கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துள் தண்டமாகக் கொடுக்கும்படி கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

வேறு தண்டனையோடு சேர்த்து மேலதிகமாகத் தண்டம் எப்போது சுமத்தப்படும் என்பது.

[பி.11, 1965 இன் 2]

[பி.13, 1980 இன் 9]

மேலதிகக் குற்றப்பணம் விதித்தல்.

*26அ*. மேல் நீதிமன்றம் 23அ என்னும் பிரிவின் கீழான தவறைப் புரிந்ததற்கென ஆளெவருக்கும் குற்றத் தீர்ப்பளிக்கின்றவிடத்து, இலஞ்சத்தினால் பெறப்பட்ட அல்லது இலஞ்சத்தின் வரும்படிகளினால் பெறப்பட்ட அல்லது இலஞ்சத்தினால் அல்லது இலஞ்சத்தின் வரும்படிகளினால் ஆதனமாக்கப்பட்ட தொகை என்று அந்நீதிமன்றம் கண்டுள்ள தொகைக்குக் குறையாததும் அத்தகைய தொகையின் மும்மடங்குக்குக் கூடாததுமான குற்றப் பணமொன்றை, இச்சட்டத்தின்கீழ் விதிப்பதற்கு அது தேவைப்படுத்தப்பட்டுள்ள வேறேதேனும் தண்டத்துடன் மேலதிகமாக விதித்தல் வேண்டும்.

[பி.11, 1974 இன் 38]

[பி.14, 1980 இன் 9]

*27*. நீக்கஞ்செய்யப்பட்டது. [பி.4, 1994 இன் 20]

**28*. (1) எவரேனும் ஆள்மீது இலஞ்சத்துக்காக நீதிமன்றமொன்றினால் விதிக்கப்படும் குற்றப்பணம் அல்லது தண்டம், அந்தக் குற்றப்பணத்தை அல்லது தண்டத்தை விதிக்கும் கட்டளை அரசின் சார்பிலும் அந்த ஆளுக்கெதிராகவும் பதியப்பட்ட அந்த நீதிமன்றத்தின் தீர்வையொன்றென்றாற்போன்று அறவிடப்படலாம்.

மன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணத்தை அல்லது தண்டத்தை அறவிடுதல்.

[பி.13, 1965 இன் 2]

[பி.16, 1980 இன் 9.]

*(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட குற்றப்பணத்தை அல்லது தண்டத்தைக் கொடுப்பதற்கு ஆளாகியுள்ள ஆள், குற்றப் பணமானது அல்லது தண்டமானது எத்தவறுக்காக விதிக்கப்பட்டதோ அத்தவறு புரியப்பட்ட தேதியில் பகிரங்க சேவையாளரொருவராக இருந்திருக்கின்றவிடத்து, அப்போது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்தகைய ஆளின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனங்களுடனும் மேலதிகமாக அந்தத் தேதியின் பின்னர் அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணையினால் அல்லது அவராற் பராமரிக்கப்படும் மகனால் அல்லது மகளால் கொள்வனை செய்யப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும், அவ்வாறு கொள்வனை செய்யப்பட்ட ஆதனம் –

(அ) அத்தகைய வாழ்க்கைத் துணையினால், மகனால் அல்லது மகளால் வாங்கப்பட்டிருந்தால் ; அல்லது

(ஆ) அத்தகைய குற்றப்பணத்தை அல்லது தண்டத்தைக் கொடுக்க ஆளாயுள்ள ஆளினால் அத்தகைய வாழ்க்கைத்துணையின், மகனின் அல்லது மகளின் பேரில் வாங்கப்பட்டிருந்தால் ; அல்லது

(இ) அத்தகைய குற்றப்பணத்தை அல்லது தண்டத்தைக் கொடுக்க ஆளாயுள்ள ஆள் எந்த அவாநிறைவை ஏற்றதனால் அவ்வாறு ஆளானாரோ அந்த அவாநிறைவை கொடைமுனைந்த ஆளிடமிருந்து அத்தகைய வாழ்க்கைத்துணையினால், மகனால் அல்லது மகளால் கொள்வனைமூலம், நன்கொடைமூலம் அல்லது வேறுவகையாகக் கொள்ளப்பட்டிருந்தால் ; அல்லது

(ஈ) அத்தகைய குற்றப்பணத்தை அல்லது தண்டத்தைக் கொடுப்பதற்கு ஆளாயுள்ள ஆளிடமிருந்து மரணசாதன வழியுரிமையால் அல்லது மரணசாதனமிலா வழியுரிமையால் கொள்ளப்பட்டிருந்தால்,

அத்தகைய குற்றப்பணத்தொகையை அல்லது தண்டத்தை அறிவிடுவதற்காகக் கைப்பற்றப்பட்டு விற்கப்படுவதற்கிலக்காதல் வேண்டும்.

* (2) ஆம் உட்பிரிவும் (4) ஆம் உட்பிரிவும் 1965 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தால் நீக்கஞ்செய்யப்பட்டன.

எந்த ஆதனம் தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளதோ அந்த ஆதனத்தை இழப்பிக்கச் செய்தல்.

*28அ. (1) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு நீதிமன்றம் ஆளொருவருக்கு இச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றமானது, 26 ஆம் பிரிவின்கீழ் அல்லது 26அ என்னும் பிரிவின்கீழ் தண்டப்பணம் ஒன்றை விதிப்பதற்குப் பதிலாக இலஞ்சத்தின் மூலம் அல்லது இலஞ்சத்தின் வரும்படிகள்மூலம் கொள்ளப்பட்டதாகக் காணப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லா வில்லங்கங்களிலிருந்து விடுபட்டதாக அரசுக்கு இழப்பிக்கப்பட வேண்டும் என்ற கட்டளையை ஆக்கலாம். [பி.5, 1994 இன் 20.]

ஆயினும், எவ்வாறாயினும், இழப்பித்தற் கட்டளையொன்று ஆக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கையில், நீதிமன்றம், அத்தகைய கட்டளையொன்று பெறுமதிக்கு நல்லெண்ணத்துடனான கொள்வனவாளரொருவரின் அல்லது பெறுமதிக்கு அத்தகைய ஆனத்தில் நல்லெண்ணத்துடனான அக்கறையொன்றை பெற்றுக் கொண்டுள்ளவரான வேறு எவரேனும் ஆளின் உரிமைகளை பங்கப்படுத்தும் சாத்தியமிருக்கின்றதா என்பதைக் கருத்திற்கொள்ள உரித்துடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று —

(அ) இழப்பித்தல் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து இழப்பித்தல் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி அதகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன் மீது ;

* முதன்மைச் சட்டத்தின் தொடங்கத் தேதியன்று பிரிவு 28அ வலுவுக்கு வந்துள்ளதுடன் அதில் குறிக்கப்பட்டுள்ள தண்டனைகள் 1994 திசெம்பர் 15 ஆம் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட குற்றங்களுக்கும் பொருந்தும். (பிரிவு 18, 1994 இன் 20 ஐ பார்க்க)

(ஆ) இழப்பித்தல் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத்து, எந்தக் காலப்பகுதிக்குள் நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு முன்வைக்கப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர்,

பயனுறுதல் வேண்டும்.

ஆளொருவர் இலஞ்சத்துக்காக நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதனால் அல்லது ஆளொருவர் இலஞ்சத்துக்காகக் குற்றவாளியென்று விசாரணை ஆணைக்குழு முடிவெடுப்பதால் ஏற்படும் விளைவு.

[பி. 18, 1958 இன் 40.]
[பி. 17, 1980 இன் 9.]

**29.** ஆளொருவர் நீதிமன்றமொன்றினால் அல்லது ஒரு விசாரணை ஆணைக்குழுவினால் இலஞ்சத்துக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து அல்லது குற்றவாளியாகக் காணப்படுகின்றவிடத்து, அப்போது, அத்தகைய குற்றத்தீர்ப்பின் அல்லது குற்றவாளியாகக் காணப்படுவதன் காரணமாக—

(அ) அவர், அத்தகைய குற்றத்தீர்ப்பு அல்லது குற்றவாளியாகக் காணப்படும் தேதியிலிருந்து ஏழாண்டு காலத்துக்கு, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவை கட்டளையின்கீழ் அல்லது ஐந்தாண்டு காலத்துக்கு உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ், தேருநர் ஒருவராகப் பதியப்படவோ ஏதேனும் தேர்தலில் வாக்களிக்கவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராக அல்லது உள்ளூரதிகாரசபையுறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படவோ நியமிக்கப்படவோ தகுதியற்றவராதல் வேண்டும்; அத்துடன், அந்தத் தேதியன்று அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அல்லது உள்ளூரதிகாரசபையுறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது நியமிக்கப்பட்டிருப்பின் அவரது தேர்வு அல்லது நியமனம் அந்தத் தேதியிலிருந்து வறிதாக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அவர், பகிரங்கசேவையாளர் ஒருவராக தொழிற்கமர்த்தப்படுவதற்கும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்துக்கு அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அல்லது நியமிக்கப்படுவதற்கும் என்றென்றைக்கும் தகைமையற்றவராதல் வேண்டும்;

(இ) அவர், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளுங்குழுவின் உறுப்பினராக இருப்பின், அவர் அத்தகைய குற்றத்தீர்ப்புத் தேதியிலிருந்து அல்லது குற்றவாளியாகக் கண்ட திகதியிலிருந்து அத்தகைய உறுப்பினராக இலலாதொழிதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அவர் ஒரு பகிரங்க சேவையாளராக இருப்பின், அவர், அத்தகைய குற்றத்தீர்ப்புத் தேதியிலிருந்து அல்லது குற்றவாளியாகக் கண்ட தேதியிலிருந்து பகிரங்க சேவையாளராக இல்லாதொழிதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அவரைப் பதவியிலிருந்தகற்றச் சட்டப்படி தத்துவம் பெற்ற அதிகாரியினால் அந்தத் தேதியன்று பதவியிலிருந்து அகற்றப்பட்டுவிட்டார் என்று கருதப்படுதலும் வேண்டும்.

இப்பாகத்தின் கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்க தவறுகளாதல்.

**30.** இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறுகள் யாவும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்துக்காக, அச்சட்டத்தின் முதலாமட்டவணையில் அடங்கியுள்ளது எது எவ்விதமிருப்பினும், பிடியாணையின்றிக் கைது செய்யப்படக்கூடிய தவறுகளாதல் வேண்டும்.

சட்டவிரோதமான அவாநிறைவைப் பெறுகின்ற ஆள் கண்டுபிடிக்கப்பட்டதன் மீதான நடவடிக்கை முறை.

30அ. (1) ஆணைக்குழுவிற்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் சட்டவிரோதமான அவாநிறைவொன்றை ஏற்றுக்கொள்கின்ற, பரிந்து கேட்கின்ற அல்லது கொடுக்க முனைகின்ற எவரேனும் ஆளைக் கண்டுபிடிக்குமிடத்து, அத்தகைய அலுவலர் —

[பி. 6, 1994 இன் 20.]

(அ) அவசியமற்ற தாமதமின்றி அத்தகைய ஆளை எவரேனும் நீதிவான் முன்னிலையில் கொணருதல் வேண்டும்; அல்லது



4.

(ஆ) அத்தகைய ஆள் சட்டவிரோதமான அவாநிறைவொன்றை ஏற்றுக்கொள்ளுதல், பரிந்து கேட்டல் அல்லது கொடுக்க முனைதல் கண்டுபிடிக்கப்பட்டதென பணிப்பாளர் தலைமையதிபதி கைப்பட்ட சான்றிதழொன்றுடன் அத்தகைய ஆளை எவரேனும் நீதிவான் முன்னிலையில் முன்வைத்தல் வேண்டும் ; அல்லது

(இ) பந்தி (அ) என்பதில் அல்லது பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளினால் சட்டவிரோதமான அவாநிறைவொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பரிந்து கேட்கப்பட்டதாக அல்லது கொடுக்க முனையப்பட்டதாக சார்த்துரைக்கப்பட்ட எவையேனும் நாணயத்தாள்களை, அத்தகைய தாள்கள் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக, பரிந்து கேட்கப்பட்டதாக அல்லது கொடுக்க முனையப்பட்டதாக சார்த்துரைக்கப்பட்டன என்னும் பணிப்பாளர் தலைமையதிபதி கைப்பட்ட அறிக்கையொன்றுடன் சேர்த்து எவரேனும் நீதிவான் முன்னிலையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் எவரேனும் நீதிவான் முன்னிலையில் முன்வைக்கப்படுமிடத்து, நீதிவான் விளக்கம் முடிவடையும்வரை அத்தகைய ஆளை விளக்க மறியலில் வைத்தல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், நீதிவான் விதிவிலக்கிற்குரிய சூழ்நிலைகளிலும் அத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகவும், விளக்கம் முடிவடைவதற்கு முன்னரான ஏதேனும் நேரத்தில் அத்தகைய ஆளை பிணையில் விடுவிக்கலாம்.

(3) எவையேனும் நாணயத்தாள்கள் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் எவரேனும் நீதிவான் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படுமிடத்து, நீதிவான், சான்றிதழில் தரப்பட்டுள்ள வகுதியையும், இலக்கங்களையும் கொண்ட தாள்கள் தம்முன் சமர்ப்பிக்கப்பட்டன என்ற பயன்படவமைந்த தனது கைப்பட்ட சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழ், எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய தாள்களை சமர்ப்பிப்பதற்குப் பதிலாக, அத்தகைய தாள்களை ஏற்றுக்கொண்டுள்ளதாக, பரிந்து கேட்டுள்ளதாக அல்லது கொடுக்கமுனைந்ததாக சார்த்துரைக்கப்பட்ட ஆளுக்கெதிராகத் தொடரப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் தகவுடையதாதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) என்பதன் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் கட்டுக்காவலிலுள்ள ஆளுக்கெதிராக தான் வழக்கு நடவடிக்கைகளைத் தொடர உத்தேசிக்கவில்லையென ஆணைக்குழு நீதிவானுக்கு அறிவிக்குமிடத்து அத்தகைய ஆள் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

31. நீக்கஞ்செய்யப்பட்டது. [பி. 19, 1980 இன் 9.]

## பாகம் III

### விசாரணை ஆணைக்குழுக்கள்

*32. (1) குடியரசின் பொது இலச்சினையின் கீழ், எழுத்தாணை மூலம், சனாதிபதியானவர் – [இலஞ்சக் குற்றச் சாட்டுகளை புலனாய்வு செய்வதற்காக விசாரணை ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கான தத்துவம்.]

(அ) அமைச்சரவைக்கெதிராக அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராக அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையினது உறுப்பினர்களுக்கெதிராக அல்லது சனாதிபதியினால் ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆட்களுக்கெதிராக அல்லது ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு, பணிப்பாளர்களுக்கு அல்லது ஆளுங் குழுவுக்கு எதிராகப் பொதுவாகச் செய்யப்பட்ட ; அல்லது

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் குறித்த ஆள் அல்லது ஆட்களுக்கெதிராகச் செய்யப்பட்ட,

இலஞ்ச சார்த்தல்கள் எவற்றையும் விசாரணை செய்வதற்காகவும் அவைமீது அறிக்கையிடுவதற்காகவும் உறுப்பினர் ஒருவரை அல்லது அதற்கு மேற்பட்டோரைக் கொண்ட விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமனஞ் செய்யலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் ஓர் எழுத்தாணை, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் அச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் எழுத்தாணை ஒன்றில் எடுத்துக்காட்டப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை.

**33.** இச்சட்டத்தின்கீழ் விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதும், 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகளும் 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும் தவிர்ந்த விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு அச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டாற்போன்று அதே முறையில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

விசாரணை ஆணைக் குழுக்களின் தத்துவங்கள்

**34.** (1) விசாரணை ஆணைக்குழு ஒன்று, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழுள்ள தத்துவங்களுடன் —

(அ) அந்த ஆணைக்குழுவின் முன்னிலையிலான நடவடிக்கைகளில் எவரேனும் ஆள்மீது வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளையை 12 ஆம் பிரிவின் (அ), (ஆ),

(இ), (ஈ), (உ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சேர்ப்பிக்கச் செய்வதற்கான தத்துவத்தையும் ;

(ஆ) அழைப்புக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாத சந்தர்ப்பத்தில் பிடியாணைகள் வழங்குவதற்கான தத்துவத்தையும் ;

(இ) ஆணைக்குழு எவ்வாள் அல்லது ஆட்கள் தொடர்பில் விசாரணையொன்றை நடத்துகின்றதோ அவ்வாளை அல்லது அவ்வாட்கள் ஒவ்வொருவரையும், அத்தகைய ஆளுக்கும் அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணை, ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் ஆகியோருக்கும் உரிய அல்லது அவர்களால் உடைமையில் வைத்திருக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லாவற்றையும் எடுத்துரைத்தும், கொள்வனை, கொடை மரணசாதன வழிக் கொடுப்பனவு, மரபுரிமை மூலமாகவோ வேறு வகையாகவோ எடுத்துரைக்கப்பட்ட ஆதனங்களுள் ஒவ்வொன்றும் கொள்ளப்பட்ட தேதியைக் குறித்துரைத்தும் சத்தியஞ் செய்துறுதிப்படுத்தப்பட்ட கூற்று ஒன்றை எழுத்தில் கொடுத்துதவும்படி எழுத்திலான அறிவித்தல்மூலம் தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தையும் ;

(ஈ) வேறு ஆள் எவரையும், அத்தகைய ஆளுக்குரிய அல்லது அவரால் உடைமையில் வைத்திருக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லாவற்றையும் எடுத்துரைத்து சத்தியஞ்செய்துறுதிப்படுத்தப்பட்ட கூற்று ஒன்றை எழுத்தில் கொடுத்துதவும்படி, அத்தகைய தகவல் விசாரணைக்கு உதவக்கூடுமென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் ஆணைக்குழுவுக்கிருக்குமிடத்து, எழுத்திலான அறிவித்தல்மூலம் தேவைப்படுத்துதற்கான தத்துவத்தையும் ;

(உ) விசாரணை எவ்வாள் அல்லது ஆட்கள் தொடர்பில் நடத்தப்படுகின்றதோ அவ்வாள் அல்லது அவ்வாட்கள் ஒவ்வொருவர் தொடர்பிலும், [பி. 20, 1958 இன் 40.]



5.

அவ்வாளின் வாழ்க்கைத்துணை, ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் தொடர்பிலும் ஏதேனும் வங்கியை அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை, அலுவலகத்தை அல்லது தாபனத்தை அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையை அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தை 4 ஆம் பிரிவின் கீழ் காண்பிக்கப்படவேண்டுமென அல்லது கொடுத்துதவப்படவேண்டுமென இலஞ்ச ஆணையாளர் தேவைப்படுத்தக்கூடிய அத்தகைய புத்தகங்களையும் ஆவணங்களையும் காண்பிக்கும்படியும், ஏதேனும் அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் ஏதேனும் அத்தகைய தகவலையும் கொடுத்துதவும் படியும், எழுத்திலான அறிவித்தல்மூலம் தேவைப் படுத்துவதற்கான தத்துவத்தையும் ;

(ஊ) ஆணைக்குழுவை அமைக்கும் எழுத்தாணை மூலம் அல்லது ஏதேனும் பின்னைய எழுத்தாணை மூலம் சனாதிபதியினால் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்படக் கூடிய அத்தகைய வேறு தத்துவங்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒரு விசாரணை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பிடியாணை ஒன்று—

(அ) ஆணைக்குழுவின் தவிசாளரின் கைப்பட அல்லது ஆணைக்குழு ஒரேயொரு ஆணையாளரைக் கொண்டிருப்பின் அத்தகைய ஆணையாளரின் கைப்பட இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அது எப்பொலிசு அலுவலருக்கு விடுக்கப்பட்டதோ அப்பொலிசு அலுவலரினால் நிறைவேற்றப்படலும் வேண்டும்.

அத்தகைய ஏதேனும் பிடியாணைக்காக முத்திரைத் தீர்வை எதுவும் கொடுபடற்பாலதாகாது.

(3) விசாரணை ஆணைக்குழு ஒன்று, அதனால் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் பெறப்பட்ட தகவல் எல்லாவற்றையும் மிக இரகசியமாக வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அது, அத்தகைய தகவலை, இலஞ்ச ஆணையாளர், எவ்வாள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றதோ அவ்வாள் அல்லது அவ்வாளுக்காகத் தோன்றுகின்ற எவரேனும் சட்டத்தரணி தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதலாகாது. [பி. 20, 1958 இன் 40.]

பாதிக்கப்பட்ட ஆள் வராதவிடத்தும் விசாரணை நடத்தல்.

**35.** விசாரணை ஆணைக்குழு ஒன்று எவ்வாள் தொடர்பில் ஒரு விசாரணையை நடத்துகின்றதோ அவ்வாள் விசாரணைக்குச் சமுகந்தர மறுக்கின்றவிடத்து அல்லது அலட்சியம் செய்கின்றவிடத்து, ஆணைக்குழு அவ்வாளில்லாமலே விசாரணையைத் தொடர்ந்து நடத்தலாம்.

சான்றுக்கான மொழி.

**36.** (1) விசாரணை ஆணைக்குழு ஒன்று, அதற்கு முன்னிலையில் கொடுபடும் சான்றை அது தகுந்ததெனக் கருதக்கூடிய அத்தகைய மொழியில் எழுதப்படச் செய்யலாம்.

(2) ஒரு விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் விளங்கிக்கொள்ள முடியாத மொழி ஒன்றில் சான்றெதுவும் கொடுபடுமிடத்து, அது அவ்வுறுப்பினரால் விளங்கிக் கொள்ளப்படும் மொழி ஒன்றில் மொழி பெயர்த்துக் கூறப்படுதல் வேண்டும்..

விசாரணை ஆணைக்குழுவுக்குக் கெதிரான அவமதிப்புத் தவறு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**37.** (1) விசாரணை ஆணைக்குழு ஒன்றின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அவமரியாதையாக புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கு ஆணைக்குழுவின் தவிசாளரின் கைப்பட்ட அல்லது ஆணைக்குழு ஒரேயொரு ஆணையாளரை கொண்டிருக்குமிடத்து அத்தகைய ஆணையாளரின் கைப்பட்ட கடிதமூலம், அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவழி, விசாரணை ஆணைக்குழு ஒன்றிடமிருந்து (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்று அவருக்குக் கிடைக்கப் பெற்றதும் அந்த ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாக அவமதிப்புத் தவறுபுரிந்தவராக அந்த அறிவிப்பில் பெயர் குறிக்கப்பட்ட ஆள்மீது நீதிமன்ற அவமதிப்புக்கான பின்னுறுதி விதிப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எவ்வாள்மீது பின்னுறுதி விதிப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் திருப்திக்கு அவர் காரணம் காட்டினாலொழியத் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(4) விசாரணை ஆணைக்குழு ஒன்றின் அதிகாரத்திற்கெதிராக அல்லது அதற்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறுக்காக எவரேனும் ஆளுக்கெதிரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும் அந்த ஆளினால் ஒரு சாட்சியாக அழைக்கப்படுவதற்கு ஆளாதலாகாது. ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரை, அவ்வாறு செய்வது அவசியமானதென அந்த நீதிமன்றம் கருதினால், விசாரிக்கலாம்.

விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படுதல்.

**38.** (1) சனாதிபதி, விசாரணை ஆணைக்குழு ஒன்றின் அறிக்கையை வெளியிடுவதனால் பொதுமக்கள் நலன் பாதிக்கப் படமாட்டாதென அபிப்பிராயப்பட்டால் அவ்வறிக்கையை வெளியிடும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

(2) சனாதிபதி, விசாரணை ஆணைக்குழு ஒன்றின் அறிக்கையை வெளியிடுவதனால் பொதுமக்கள் நலன் பாதிக்கப்படுமென்ற ஏதுவின்மீது அதை வெளியிடுவதில்லையென முடிவு செய்யுமிடத்து, அவர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின்மூலம் அவ்வாறு செய்யும்படி வேண்டப்பட்டதன்மேல் அத்தகைய அறிக்கையை வெளியிடும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

அவாநிறைவை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஆள் இலஞ்சக் குற்றவாளியென விசாரணை ஆணைக்குழு காணுமிடத்து, அவாநிறைவின் பெறுமதியை மதிப்பிடுதல்.

**39.** (1) அவாநிறைவை ஏற்றுக்கொண்டதன் மூலம் எவரேனும் ஆள் இலஞ்சக் குற்றவாளியென விசாரணை ஆணைக்குழு ஒன்று காணுமிடத்து —

(அ) ஆணைக்குழு, அதனது அறிக்கையில், அந்த அவாநிறைவு ஒரு தொகைப் பணமாயின், அத்தொகையைக் கூறுதல் வேண்டும் அல்லது அந்த அவாநிறைவின் பெறுமதி மதிப்பிடக்கூடியதாயின், அப்பெறுமதியை மதிப்பிட்டு வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதி, காணப்பட்ட அத்தகைய முடிவை அவ்வாளுக்கு எழுத்தில் அறிவிக்கவேண்டுமென்பதுடன், அந்த அவாநிறை வின் தொகையாக அல்லது பெறுமதியாகப் பணத் தொகை ஒன்று அவ்வறிக்கையில் குறித்துரைக்கப் பட்டிருப்பின், அப்பணத்தொகையை அப்பணிப்பில் குறிப்பிடக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குக் கொடுக்க வேண்டுமென அவ்வாளை பணித்தலும் வேண்டும்.

(2) ஓராட் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படவேண்டுமெனச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பணிக்கப்பட்ட பணத் தொகையைக் கொடுப்பதற்கு ஆள் ஒருவர் தவறினால், சட்டத் துறைத் தலைமையதிபதி, கட்டளை ஒன்றுக்காக மேல்நீதிமன்றத் துக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன், அத்கைய விண்ணப்பத் தின் மீது, மேல்நீதிமன்றம், அவ்வாளினால் அப்பணத்தொகை யின் கொடுப்பனவுக்கென, கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும் ; அத்துடன், அக்கட்டளையினால் அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் அப்பணத்தொகையைக் கொடுப்பதற்கு அவ்வாள் தவறினால், அக்கட்டளையானது அரசின் சார்பிலும் அவ்வாளுக் கெதிராகவும் மாவட்ட நீதிமன்றத்தினால் எழுதப்பட்ட தீர்வை ஒன்றானாற்போன்று அதேமுறையாக அப்பணத்தொகை அறவிடப்படலாம். [பி. 20, 1980 இன் 9.]

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகியவர், அவாநிறைவை அவர் ஏற்றுக்கொண்ட தேதியில், பகிரங்க சேவையாளர் ஒருவரா யிருந்திருப்பின், 28 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு கள், அப்பணத்தொகையை அறவிடும் நோக்கங்களுக்காக, 26 ஆம் பிரிவின்கீழ் மேல் நீதிமன்றம் ஒன்றினால் விதிக்கப்பட்ட தண்டமாக அப்பணத்தொகை இருந்தாற்போன்று அதே முறையில் ஏற்புடையனவாதல் வேண்டும். [பி. 20, 1980 இன் 9]

(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத் தொகையை அறவிடுவதற்கான மேல் நீதிமன்றம் ஒன்றின் வழக்கு நடவடிக்கைகளில், அந்நீதிமன்றத்துக்கு அல்லது எவராயினு மொருவருக்கு, அவாநிறைவின் தொகையென அல்லது பெறுமதி யென விசாரணை ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தப்பட்ட பணத்தொகையை கேள்விகளுக்குட்படுத்துவதற்குத் தகுதியில்லா திருத்தல் வேண்டும். [பி. 20, 1980 இன் 9]

## * பாகம் V

### இலஞ்சம் தவிர்ந்த வேறு தவறுகள்

ஊழல்.

[பி. 7, 1994 இன் 20]

**70.** அரசாங்கத்திற்குத் தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்டவிரோதமான நன்மையை, சாதகமான பயனை அல்லது அனுகூலத்தை அளிக்கின்ற முன்னத்துடன் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்படும் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகமான பயன் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்னும் அறிவுடன் --

(அ) பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக்கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் பெற்றிருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்யாது தவிர்க்கின்ற ;

(ஆ) அத்தகைய வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை, பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக்கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் கொண்டிருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாது தவிர்க்குமாறு வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைத் தூண்டுகின்ற ;

(இ) பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற ;

(ஈ) பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு ஏதேனும் முடிவை எடுப்பதில் பங்குபற்றுகின்ற ;

(உ) பகிரங்க ஊழியர் ஒருவராக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் செயலைப் புரிவதற்கு அல்லது புரியாமல் தவிர்ப்பதற்கு அவரது பதவியை பயன்படுத்துமாறு வேறு எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற,

---

* 1965இன் 2 ஆம் இலக்கச் சட்டத்தால் 4 ஆம் பாகம் நீக்கஞ்செய்யப்பட்டது.

எவரேனும் பகிரங்க ஊழியர் ஊழல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரினால் சுருக்கமுறையிலான விளக்கத்தின் மீதும் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மீதும் பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தகவலைக் கொடுத்துதவத் தவறுதல். [பி. 8, 1994 இன் 20]

71. எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது ஏதேனும் இரகசியம் பேணற் சத்தியத்திற்கு முரணாக எது எவ்விதமிருப்பினும் அல்லது 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விசாரணை ஆணைக்குழுவினால் அறிவித்த லொன்று அனுப்பப்பட்ட ஒவ்வோர் ஆளும் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அவ்வறித்தலின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டு மென்பதுடன், அவர் அவ்வாறு செய்வதற்கு வேண்டுமென்று புறக்கணித்தால் அல்லது செய்யாதுவிட்டால், அவர் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் —

(அ) நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதத்துக்கு மேற்படாத இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவர் சத்தியத்தின்மீதான கூற்றைக் கொடுத்துதவ வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தேதிக்குப் பின்னர் தவறானது தொடர்ந்து புரியப்படும் காலத் துக்கு நாளொன்றுக்குக் நூறு ரூபாவிற்குக் குறையாத ஒரு குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

[பி. 9, 1994 இன் 20]

**72.** நீக்கஞ்செய்யப்பட்டது.

சாட்சிகளுடன் தலையிடுதல்.

[பி. 23. 1980 இன் 9]

***73.** (1) (அ) நீதிமன்றத்திலான அல்லது விசாரணை ஆணைக்குழுவிலான அல்லது நீதிமன்றத்தின் முன்னரான அல்லது விசாரணை ஆணைக்குழுவின் முன்னரான இலஞ்ச வழக்கு நடவடிக்கைகளெவற்றுக்காகவும் அழைக்கப்படும் எவரேனும் சாட்சிக்காரருடன் தலையிடும் ; அல்லது

[பி. 10, 1994 இன் 20]

(ஆ) அத்தகைய சாட்சிக்காரர் எவரையும் சான்று கொடுக்காமல் ஒதுங்கியிருக்குமாறு ஊக்குவிக்கும் ; அல்லது

[பி. 10, 1994 இன் 20]

(இ) அத்தகைய சாட்சிக்காரர் எவரையும் சான்று அளிப்பதிலிருந்து தடுப்பதற்காக, அவரின் உடலுக்கு, உளத்துக்கு அல்லது புகழுக்கு ஊறு விளைவிக்கப்போவதாகப் பயமுறுத்தும் ; அல்லது

[பி. 10, 1994 இன் 20]

(ஈ) சான்று அளிப்பதிலிருந்து அவரைத் தடுப்பதற்காக அத்தகைய சாட்சிக்காரருக்கு, உடலில், உளத்தில் அல்லது அத்தகைய ஆளின் புகழுக்கு ஊறுவிளைவிக்கும் ; அல்லது

[பி. 10, 1994 இன் 20]

(உ) சான்று அளிக்கவேண்டாமென்று அத்தகைய சாட்சிக்காரர் எவரையும் கட்டாயப்படுத்தும்,

ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் சுருக்கமுறை விளக்கத்தின் மேலும் நீதிவானால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேலும் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்குக் கடூழிய மறியற்றண்டனைக்கும் அத்துடன் குற்றப்பணத்துக்குமாளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் ஒரு தவறைப் புரிந்துள்ளாரென அல்லது அத்தவறு புரியப்படுவதில் சம்பந்தப்பட்டிருக்கின்றாரென அல்லது அத்தவறைப் புரிந்துள்ளவராக அல்லது அத்தவறு

புரியப்படுவதில் சம்பந்தப்பட்டிருந்தவராகச் சந்தேகிக்கப்படுகின்றாரெனச் சார்த்தப்பட்டதன்மீது எவரேனும் ஆள் எந்த நீதிமன்றத்தின் முன்னர் தாமாகவே சரணடைகின்றாரோ அல்லது கைது செய்யப்பட்டுக் கொணர்ந்து நிறுத்தப்படுகின்றாரோ அந் நீதிமன்றம் ஒவ்வொன்றும் அத்தகைய ஆளை விளக்கம் முடிவடையும் வரையில் விளக்கமறியலில் வைத்திருத்தல் வேண்டும். ஆனால் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் நீதிவான் ஒருவரின் முன்னிலையில் நிறுத்தி எழுத்துமூலமான வாக்குமூலத்தைப் பெற்றபின்பு பிணையில் விட முடியும்.

இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின உறுப்பினர் செல்வாக்குப் பிரயோகித்தல், அவரைப் பயமுறுத்தல் அல்லது அவருக்கு ஊறுசெய்தல்.

[பி. 20, 1965 இன் 2.]

**74.** (1) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர்மீது அவர் தமது கடமையைப் புரிவதில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ செல்வாக்கைப் பிரயோகிக்கும் ஆள் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவரினால் சுருக்கமுறையில் விளங்கப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருநூறு ரூபாவிற்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

[பி. 11, 1994 இன் 20.]

(2) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரை அவர் தமது கடமையைப் புரிவதிலிருந்து அவரைப் பின்னடையச் செய்வதற்காக அவருடைய உடலுக்கு, உள்ளத்துக்கு அல்லது புகழுக்கு ஏதேனும் ஊறு செய்யப்போவதாக எழுத்திலான அல்லது பேச்சிலான சொற்கள் மூலம் அல்லது ஏதேனும் செயல் மூலம் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பயமுறுத்தும் ஆள் ஒருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரினால் சுருக்கமுறையில் விளங்கப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூறு ரூபாவிற்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப் பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும். அத்துடன் இவ்வுட்பிரிவின் கீழான தவறொன்றுக்கு இரண்டாவது முறையாக அல்லது அடுத்துக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய குற்றப்பணத்துடன் ஓர் ஆண்டுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

[பி. 11, 1994 இன் 20.]

[பி. 20, 1965 இன் 2.]

[பி. 11, 1994 இன் 20.]

(3) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அவர் தமது கடமையைப் புரிவதிலிருந்து அவரைப் பின்னடையச் செய்வதற்காக அவரின் உடலுக்கு, உள்ளத்துக்கு அல்லது புகழுக்கு ஊறு செய்யும் ஆளொருவர், ஒரு நீதிவானால் சுருக்கமுறையில் விளங்கப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கும் குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

விசாரணை ஆணைக்குழுவுக்குக் கீழ்ப்படியாமை.

[பி. 21, 1965 இன் 2.]

**75.** (1) ஒரு விசாரணை ஆணைக்குழுவின் கட்டளை ஒன்றை நிறைவேற்ற மறுக்கும் அல்லது வேண்டுமென்றே நிறைவேற்றாது அலட்சியம் செய்யும் அல்லது நிறைவேற்றாது விடும் அல்லது அத்தகைய ஆணைக்குழுவை வேண்டுமென்றே தடைசெய்யும் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவரினால் சுருக்கமுறையில் விளங்கப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கும் அல்லது நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான ஒரு குற்றவழக்கு, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்படலாம்.

[பி. 22, 1965 இன் 2.]

**76.** நீக்கஞ்செய்யப்பட்டது.

விசாரணை ஆணைக்குழுவினால் இரகசியமாக நடத்தப்பட்ட வழக்கு நடவடிக்கைகளையும், அதனது அறிக்கையினையும் வெளியிடுதல்.

[பி. 23, 1965 இன் 2.]

***77.** (1) ஒரு விசாரணை ஆணைக்குழுவின் வழக்கு நடவடிக்கைகள் எவற்றிலிருந்தும் பொதுமக்களும் செய்தி நிருபர்களும் விலக்கப்பட்டுள்ளவிடத்து, ஆணைக்குழுவின் தவிசாளரின் கைப்பட அல்லது ஆணைக்குழு ஒரேயொரு ஆணையாளரைக் கொண்டிருப்பின் அத்தகைய ஆணையாளரின் கைப்பட எழுத்தில் கொடுபட்ட ஆணைக்குழுவின் அனுமதியுடனன்றி, ஆள் எவரும் அவ் வழக்கு நடவடிக்கைகளையோ அல்லது ஏதேனும் பகுதியையோ அச்சிடவோ வெளியிடவோ ஆகாது.

** (2) ஆம் உட்பிரிவு 1965 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தால் நீக்கஞ் செய்யப்பட்டது.

**(3) ஆள் எவரும், ஒரு விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சனாதிபதியின் கட்டளையின்கீழ் வெளியிடப்படுவதற்கு முன்னர் அத்தகைய அறிக்கையின் ஏதேனும் பகுதியை அல்லது அத்தகைய அறிக்கையினது ஒரு பகுதியாக அல்லது பிரித்தெடு பகுதியாக கொள்ளப்படக்கூடிய எதையாவது அச்சிடவோ வெளியிடவோ ஆகாது.

(4) இப்பிரிவின் முற்போந்த உட்பிரிவுகளுள் எதனதும் ஏற்பாடு களை மீறும் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஒரு நீதிவானால் சுருக்கமுறையில் விளங் கப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருநூறு ரூபாவிற் குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப் பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன், இவ்வுட்பிரி வின்கீழான தவறொன்றுக்கு இரண்டாவது முறையாக அல்லது அடுத்துக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய குற்றப் பணத்துடன்கூட ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## பாகம் VI

### பொது

இச்சட்டத்தின்கீழுள்ள தவறுகளுக்கான குற்றவழக்குகளும் இலஞ்ச சார்த்தல்கள் அல்லது சாட்சியத்திலும் அறிக்கைகளிலும் முடிபுகளிலும் உள்ள கூற்றுக்கள் தொடர்பான தொடர்ச்சிகளும் வழக்கு நடவடிக்கைகளும். [பி. 24, 1965இன் 2.] [பி. 24, 1980இன் 9.] [பி. 12, 1994இன் 20.]

**78.** (1) ஆணைக்குழுவின் எழுத்திலான அனுமதியினாலன்றி அல்லது அனுமதியுடனன்றி எந்த நீதிவான் நீதிமன்றமும் இச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்பை ஏற்றுக் கவனித்தலாகாது.

(2) ஒரு நீதிமன்றத்தினால் இலஞ்சத்துக்கான வழக்கு நடவடிக்கைகள் அந்நீதிமன்றத்திலுள்ள வேறு எவரேனும் அலுவலருக்கு முன்னர், அத்தகைய வேறு அலுவலின் விசேட அவசர சூழ்நிலைகள் அவ்வாறு செய்வதை இயலாததாக்கினா லொழிய, எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் அதன் சார்பில் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், ஏதேனும் இலஞ்சத்துக்காக நீதிமன்றம் எதிலுமான வழக்கு நடவடிக்கைகள் முழுவதும் அல்லது அவற்றின் ஏதேனும் பகுதி இரகசியமாக நடத்தப்படலாம்.

*(6) சனாதிபதியின் கட்டளையின்கீழ் வெளியிடப்பட்ட விசாரணை ஆணைக்குழு ஒன்றின் அறிக்கையிலுள்ளது எதுவும் அவதூறுக்கான வழக்கொன்றின் ஏதுவாக ஆக்கப்படுதலாகாதென்பதுடன், அத்தகைய ஏதேனும் அறிக்கையிலுள்ளது எதையும் அடிப்படையாகக் கொண்ட அவதூறுக்கான வழக்கொன்றை நீதிமன்றம் எதுவும் ஏற்றுக் கவனித்தலாகாது.

அவாநிறைவைக் கொடுக்கும் ஆள் உடந்தையாளாகக் கருதப்படலாகாது.

[பி. 25, 1965 இன் 2.]

[பி. 25, 1980 இன் 9.]

**79.** (1) ஒரு நீதிமன்றத்தின் அல்லது விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையிலான இலஞ்சத்துக்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அவாநிறைவொன்றைக் கொடுப்பவர், அவாநிறைவை ஏற்றுக்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கெதிரான தகுதிவாய்ந்த சாட்சி, ஒருவராதல் வேண்டுமென்பதுடன், அவர் உடந்தையாளர் ஒருவராகக் கருதப்படலாகாது ; அத்துடன், நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் முடிவு அல்லது துணிபு அத்தகைய, கொடுப்பவரின் ஒப்புறுதிப்படுத்தப்படாத சாட்சியத்தின்மீது மட்டும் தங்கியது என்பதனால் சட்டவிரோதமானதாதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கெதிரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அவ்வாளின் வாழ்க்கைத்துணை ஒரு தகுதிவாய்ந்த சாட்சியாதல் வேண்டும்.

[பி. 13, 1994 இன் 20.]

**80.** நீக்கஞ்செய்யப்பட்டது.

* (4), (5) ஆம் உட்பிரிவுகள் 1974 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தால் நீக்கஞ்செய்யப்பட்டன.

**81.** (1) இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட ஆள் ஒருவருக்கெதிரான விளக்கம் முடிவடையுமுன்னர் எந்நேரத்திலேனும், அத்தவறில் நேராக அல்லது மறைமுகமாக சம்பந்தப்பட்டிருப்பவரென அல்லது உட்கையாயிருந்தவரென எண்ணப்படும் ஆள் எவரதும் சான்றை அவ்விளக்கத்தின்போது பெறும் நோக்கத்துடன் சட்டத் துறைத் தலைமையதிபதி ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் அத்தகைய ஆளுக்கு, அத்தவறு சம்பந்தமாக அல்லது அத்தவறு புரியப்படுவதற்கு முக்கிய ஆளாக அல்லது உடந்தைப்பட்டவாராகச் சம்பந்தப்பட்ட வேறு ஒவ்வொரு ஆள் சம்பந்தமாகவும் தமது அறிவுக்குட்பட்டவரையிலான எல்லாச் சூழ்நிலைகளைப் பற்றியும் பூரணமாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்துவார் என்ற நிபந்தனையின்மீது மன்னிப்பு வழங்க முற்படலாம் ; அல்லது தமது கைப்பட்ட எழுத்தினால், அவரால் பெயர் குறிப்பிடப்படும் நீதிவான் ஒருவரை மன்னிப்பு வழங்கும்படி அதிகாரமளிக்கலாம்.

நிபந்தனையுடனான மன்னிப்பு வழங்குதல்.

[பி. 26, 1965 இன் 2.]

[பி. 14, 1994 இன் 20.]

(2) ஓராம் உட்பிரிவின்கீழான மன்னிப்பினைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வோர் ஆளினதும் சான்றை நீதிவான் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதமாகச் சத்தியத்தின்மீது பதிந்து ஆணைக்குழுவுக்கு அப்பதிவேட்டினை அனுப்பிவைத்தல் வேண்டும்.

[பி. 14, 1994 இன் 20.]

**82.** ஏதேனும் அழைப்புக்கட்டளை, அறிவித்தல், பணிப்பு, முடிபு அல்லது வேறு விடயம் பதிவுக்கடிதம் அல்லது தந்தி மூலம் எவரேனும் ஆளுக்கு அனுப்பப்படுமிடத்து அவ்வாளை அறிவிக்கப்படுமிடத்து, அப்பொழுது அத்தகைய கடிதம் அலலது தந்திக்காக அஞ்சலலுவலகத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு காண்பிக்கப்பட்டதும், அத்தகைய கடிதம் அல்லது தந்தி சேர்ப்பிக்கப்படாது திருப்பிப் பெறப்பட்டிருந்தாலொழிய, முகவரியாளரினால் அத்தகைய கடிதம் அல்லது தந்தி பெறப்பட்டதாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

கடிதம் அல்லது தந்தி கிடைக்கப் பெற்றமை பற்றிய ஊகம்.

[பி. 65, 1958 இன் 40.]

**83.** நீக்கஞ்செய்யப்பட்டது.

அட்டவணையில் திருத்தஞ் செய்தல்.
[பி. 67, 1958 இன் 40.]

* **84.** சனாதிபதி நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனை வர்த்தமானியில் வெளியிடப்படும் பிரகடனத்தின்மூலம் இச்சட்டத்தின் அட்டவணையைத் திருத்தலாம்.

[பி. 15, 1994 இன் 20.]

**85.** நீக்கஞ்செய்யப்பட்டது.

இச்சட்டத்தின் கீழான ஏதேனும் விளக்கத்தில் அல்லது விசாரணையில் சான்று கொடுப்பதற்காகச் சமுகமளிக்கும் ஆட்களின் செலவுகள்.
[பி. 69, 1958 இன் 40.]
[பி. 27, 1980 இன் 9.]

†85அ. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் விளக்கத்தில் அல்லது விசாரணையில் சான்று கொடுப்பதற்காகச் சமுகமளிக்கும் ஆள் ஒருவருக்கு, அந்த விளக்கத்திற்கு அல்லது விசாரணைக்குச் சமுகமளிப்பதிலான அவரின் செலவுகள் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XIX என்னும் அத்தியாயத்தின்கீழ் சாட்சிகளுக்காகக் காலத்திற்குக் காலம் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வீதங்களிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் திரட்டுநிதியத்திலிருந்து கொடுக்கப்படலாம்.

இச்சட்டத்தின் 29ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் ஆட்களுக்கு குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 303(5)ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல் வேண்டும்.
[பி. 28, 1980 இன் 9.]

85ஆ. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 303 (5) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இலஞ்சத்துக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கும், அந்தக் குற்றத்தீர்ப்புத் தொடர்பாகக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 (1) ஆம் பிரிவின்கீழ் நிறுத்திவைக்கப்பட்ட தண்டனை விதிக்கப்பட்டவருக்கும் இந்தச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

85இ. 1980, சனவரி 24 ஆம் நாளில் மேல்நீதி மன்றத்தில், இருநூறு ரூபாவுக்கு மேற்படாதிருக் கின்ற அல்லது இருநூறு ரூபாப் பெறுமதிக்கு மேற் படாதிருக்கின்ற அவாநிறைவைப் பரிந்துகோருத லாகிய, ஏற்றுக்கொள்ளுதலாகிய அல்லது கொடுத் தலாகிய தவறுகள் தொடர்பாக, முடிவுறாதிருக்கும் ஏதேனும் குற்றவழக்கானது, தவறின் தன்மையை யும் வேறு சூழ்நிலைகளையும் கவனத்திற் கொண்டு நீதிவான் நீதிமன்றத்திற்கு இடமாற்றப்பட வேண்டும் என மேல் நீதிமன்றம் தீர்மானிக்குமெனில், அத்த கைய ஏதேனும் குற்றவழக்கு நீதிவான் நீதிமன்றத் திற்கு மாற்றப்பட்டதாதல் வேண்டும் என்பதோடு, அத்தகைய நீதிவான் நீதிமன்றம், அதனை நீதி நெறிக்கவனத்துக்குட்படுத்திக் கேட்கவும், தீர்மானிக் கவும் அல்லது அதனை முற்றாக்கவும் நியாயாதிக் கம் கொண்டிருத்தலும் வேண்டும். [பி. 28, 1980 இன் 9.]

ஆயின், 1980 சனவரி 24 ஆம் நாளில் இந்தக் குற்றவழக்கில் சான்று எடுத்துரைத்தல் தொடங்கப் பட்டிருக்கின்றதோ அந்த ஏதேனும் குற்றவழக்கு சொல்லப்பட்ட மேல்நீதிமன்றத்தினால் கேட்கப் பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

### பொருள்கோடல்

ஆதனத்தின் மறைமுகச் சொத்தாண்மை.

**86**. ஆள் ஒருவரினால் அல்லது அவர் பெயரில் வேறு எவரேனும் ஆளுக்காக அல்லது அவரது நன்மைக்காக நம்பிக் கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படும் ஆதனம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய வேறு ஆளால் மறைமுகமாகச் சொத்தாண்மை செய்யப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

அரசாங்கம் பற்றிய குறிப்பீடு எவ்வாறு பொருள் கொள்ளப் படலாமென்பது.

**87.** இச்சட்டத்தில் அரசாங்கம் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், ஓர் உள்ளூரதிகாரசபையைப் பற்றியதும் அட்டவணைப் படுத்தப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தைப் பற்றியதுமான குறிப்பீடொன்றை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆளொருவர் ஓர் அவா நிறைவை எப்பொழுது கொடுக்கமுனைகிறார் என்பது.

**88.** ஆள் ஒருவர் அல்லது அவருடைய அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றும் வேறு எவரேனும் ஆளொருவர் நேராகவோ மறைமுகமாகவோ எவரேனும் வேறு ஆளுக்கு அல்லது அவர் நன்மைக்காக அல்லது அவருக்கு நம்பிக்கைப் பொறுப்பாக ஏதேனும் அவாநிறைவைக் கொடுத்தால், அதற்கு வாய்ப்பளித்தால் அல்லது இடமளித்தால் அல்லது ஏதேனும் அவாநிறைவைக் கொடுப்பதற்காக, அதற்கு வாய்ப்பளிப்பதாக அல்லது இடமளிப்பதாக உடன்பட்டால், பொறுப்பேற்றால் அல்லது வாக்குறுதியளித்தால், அவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவாநிறைவொன்றைக் கொடுக்க முனைந்தவராவார்.

ஆளொருவர் ஓர் அவாநிறைவை எப்பொழுது பரிந்து கேட்கிறார் அல்லது ஏற்றுக்கொள்கிறாரென்பது.

**89.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(அ) ஆள் ஒருவர் அல்லது அவருடைய அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றும் வேறு எவரேனும் ஆளொருவர் நேராகவோ மறைமுகமாகவோ, முதற் கூறப்பட்ட ஆளுக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெவரேனும் ஆளுக்காகவாயினுஞ்சரி ஏதேனும் அவாநிறைவை வற்புறுததிக்கேட்டால், வரவழைத்தால், கேட்டுக்கொண்டால் அல்லது பெறுவதற்கு விருப்பம்தெரிவித்தால், அவர் அவாநிறைவொன்றை பரிந்து கேட்பவராவார் ; அத்துடன்

(ஆ) ஆள் ஒருவர் அல்லது அவருடைய அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றும் வேறு எவரேனும் ஆளொருவர், நேராகவோ மறைமுகமாகவோ முதற்கூறப்பட்ட ஆளுக்காகவாயினுஞ்சரி அல்லது எவரேனும் வேறு ஆளுக்காகவாயினுஞ்சரி

ஏதேனும் அவாநிறைவை எடுத்துக்கொண்டால், பெற்றால் அல்லது பெற்றுக் கொண்டால் அல்லது எடுத்துக்கொள்ளுவதற்கு பெறுவதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு உடன்பட்டால், அவர் அவா நிறைவொன்றை ஏற்றுக்கொள்பவராவார்.

பகிரங்க சேவையாளர் இலங்கைக்கு வெளியில் அவாநிறைவைப் பரிந்து கோருதல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல்.

89அ. இச்சட்டத்தின்கீழ் தவறாகவுள்ள ஒரு அவாநிறைவைப் பரிந்துகோரும் அல்லது ஏற்றுக் கொள்ளும் ஓர் பகிரங்க சேவையாளர் அப்பரிந்து கோருதல் அல்லது ஏற்றுக்கொள்ளல் இலங்கைக்கு வெளியில் செய்யப்பட்டவிடத்து இலங்கையினுள் அத்தகைய தவறைப் புரிந்துள்ளார் என்று கருதப் படுதல் வேண்டுமென்பதோடு, வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பின், கொழும்பில் நடாத்தப்படும் மேல்நீதிமன்றம் அதற் கிணங்க அத்தகைய தவறை விளங்குவதற்கு நியாயாதிக்கமுடையதாயிருத்தலும் வேண்டும்.

[பி. 14, 1974 இன் 38.]
[பி. 29, 1980 இன் 9.]

சொல்லமைப்புகளின் பொருள்.

**90.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தி நின்றாலொழிய –

"நியமித்தேதி" என்பது, 1954, மாச்சு 1 ஆம் நாள் என்று பொருளாகும் ;

"இலஞ்சம்" என்பது, இச்சட்டத்தின் 11 ஆம் பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி அவாநிறைவெதனையும் கொடுக்க முனைதல், பரிந்து கேட்டல் அல்லது ஏற்றுக் கொள்ளல் என்று அல்லது அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டை மீறிச் செய்யப்பட்ட ஏதேனும் வேறு செயல் என்று பொருளாகும் ;

"ஆணைக்குழு" என்பது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்தற்கான ஆணைக்குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட, ஆணைக்குழு என்று பொருள்படும் ;

[பி. 16, 1994 இன் 20.]

[பி. 16, 1994 இன் 20.]

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இலஞ்சத்தையும் ஊழலையும் தடுப்பதற்கான பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் ;

"விசாரணை ஆணைக்குழு" என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு என்று பொருளாகும் ;

"அவாநிறைவு" என்பது –

(அ) பணத்தையும் அல்லது எதேனும் நன்கொடை, கடன், கட்டணம், வெகுமதி, தரகு, பெறுமதியான பிணை அல்லது அசைவுள்ளதாயினுஞ்சரி அல்லது அசைவற்றதாயினுஞ்சரி ஏதேனும் விவரணத்தைக்கொண்ட வேறு ஆதனம் அல்லது ஆதனத்தின் அக்கறை என்பவற்றையும் ;

(ஆ) ஏதேனும் பதவி, தொழில் அல்லது ஒப்பந்தத்தையும் ;

(இ) முழுமையாகவாயினுஞ்சரி, பகுதியளவிலாயினுஞ்சரி எத்தன்மைத்தான ஏதேனும் கடன், கடப்பாடு அல்லது வேறு பொறுப்பு தொடர்பில் ஏதேனும் கொடுப்பனவு, விடுவிப்பு, கொடுத்துத்தீர்த்தல் அல்லது ஒழித்தல் ;

(ஈ) ஓர் ஒழுக்காற்று அல்லது தண்டனைசார் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதனிலிருந்தும் அவை ஏலவே தொடரப்பட்டிருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி உறப்படும் அல்லது எதிர்நோக்கப்படும் ஏதேனும் தண்டம் அல்லது இயலாமையிலிருந்து பாதுகாப்பு உட்படவும், ஏதேனும் உரிமை அல்லது ஏதேனும் அலுவலகத் தத்துவம் அல்லது கடமையைப் பிரயோகித்தல் அல்லது பிரயோகிக்காது பொறுத்தல் உட்படவும் ஆன எத்தன்மைத்தானதுமான ஏதேனும் விவரணத்தினதான வேறு ஏதேனும் சேவை, சலுகை அல்லது அனுகூலம் ; அத்துடன்

(உ) மேற்போந்த (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் அவாநிறைவின் ஏதேனும் கொடை முனைவு, பொறுப்பேற்பு அல்லது வாக்குறுதியை

உள்ளடக்குவதாகும் ;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமசபை, சுகாதாரசபை அல்லது சீர்திருத்தச் சபையை உள்ளடக்குவதோடு —

(அ) அத்தகைய ஏதேனும் சபையின் குழுவொன்றையும் ; அத்துடன்

(ஆ) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் நகரசபையொன்றினால் அல்லது பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் பட்டினசபை யொன்றினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றையும்,

உள்ளடக்குவதாகும் ;

*"பகிரங்க சேவையாளர்" என்பது, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரையும், அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவரை யும், சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகயையும், குழுக் களின் பிரதித் தவிசாளரையும், பிரதி அமைச்சர் ஒருவரையும் மாகாணமொன்றின் ஆளுநரையும், மாகாணமொன்றின் அமைச்சர் சபையின் அமைச்சர் ஒருவரையும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையும், அரசின் அலுவலர், சேவையாள் அல்லது ஊழியர் ஒவ்வொருவரையும் அல்லது வேதனம் பெறுபவரா யினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி மாகாண சபையொன் [பி. 16(2), 1994 இன் 20.]

* 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தால் முதன்மைச் சட்ட வாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது.

*அ. இது மாகாண சபையொன்றின் ஆளுநர் ஒருவரை, மாகாணமொன்றின் அமைச்சர் சபையொன்றின் அமைச்சரை அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் ஒருவரை அல்லது மாகாண பகிரங்கச் சேவையின் உறுப்பின ரொருவரைத் தொடர்புறுத்துகின்ற அளவில் எல்லா நோக்கங்களுக்காகவும் 1987 நவெம்பர் 14 ஆம் திகதி யன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆ. இத்திருத்தம் வேறு நபரை தொடர்புறுத்துகின்றதாக இருந்தால் எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மை சட்டத்தின் தொடக்க தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். [பி. 16(2), 1994 இன் 20 ஐ பார்க்க]

றின், உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட எந்தக் கம்பனியில் ஐம்பது சதவீதத் துக்கு மேலான பங்குகள் அரசாங்கத்தால் வைத்திருக்கப் படுகின்றனவோ அந்தக் கம்பனியொன்றின் தவிசாளர், பணிப்பாளர், ஆளுநர், உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் எவரையும், மாகாண பகிரங்க சேவை உறுப்பினர் ஒருவரையும், ஏதேனும் நீதிமன்றத்தால் அல்லது வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த பகிரங்க அதிகாரசபையால் முடிவொன்றுக்காக அல்லது அறிக் கைக்காக ஏதேனும் காரணம் அல்லது காரியம் எந்த ஆளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஜூரர் ஒவ்வொருவரையும் உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒவ்வொருவருவரையும் நடுத்தீர்ப்பாளர் ஒவ்வொரு வரையும் அல்லது வேறு ஆளையும் உள்ளடக்கும்,

ஆயினும், ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை கலைக்கப் பட்டு அவ்வதிகாரசபையின் அலுவல்களின் நிர்வாகம் எவரேனும் ஆளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த அதிகாரசபை கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் இருந்தவரும் அத்தகைய கலைத்தலின் பின்னர் தொழிலில் தொடர்ந்திருப்பவருமான அதன் ஊழியர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கத்திற்குப் பகிரங்க ஊழியர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் உள்ளூரதி காரசபை குலைக்கப்பட்டிருந்தது. அவ்வுள்ளூரதிகார சபையினது அலுவல்களின் நிருவாகம் எவரேனு மாளுக்குரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வுள்ளூரதி காரசபை குலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் அவ்வுள்ளூரதிகாரசபையின் சேவையிலிருந்தவரும், அத்தகைய குலைவுக்குப் பின்னர் தொழிலில் தொடர்ந் திருப்பவருமான ஊழியரொவ்வொருவரும், இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பகிரங்க சேவையாள ரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

"அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்" என்பது, இச்சட்டத்திற்கான அட்டவணையில் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய ஏதேனும் சபை, நிறுவனம், கூட்டுத்தாபனம் அல்லது வேறு குழு என்று பொருளாகுமென்பதுடன் இச்சட்டத்தின் பொருளுக்குட்பட, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாக இருக்கவேண்டுமென ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ், கருதப்படுகின்ற ஏதேனும் சபை, நிறுவனம், கூட்டுத்தாபனம் அல்லது வேறு குழு என்றும் பொருளாகும் என்பதுடன் ஏதேனும் கம்பெனியில் அது பகிரங்கக் கம்பெனியாயிருப்பினும் சரி, தனியார் கம்பெனியாருப்பினும் சரி அல்லது வேறு குழுவில் — [பி. 30, 1980 இன் 9.]

(அ) அத்தகைய சபை, நிறுவனம், கூட்டுத்தாபனம் அல்லது வேறு குழு ஐம்பத்தொரு சதவீதத்துக்குக் குறையாத பங்குகளைக் கொண்டிருப்பின் ; அல்லது

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய சபை, நிறுவனம், கூட்டுத்தாபனம், அல்லது வேறு குழு கூட்டுமொத்தமாக ஐம்பத்தொரு சதவீதத்துக்குக் குறையாத பங்குகளைக் கொண்டிருப்பின்,

அத்தகைய ஏதேனும் கம்பெனியையும் அல்லது குழுவையும் உள்ளடக்கும்.

பிரிவுகள் 84 உம் 90 உம்

## அட்டவணை

1. நீர்ப்பாசனத் (திருத்தச்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள்.

2. பொதுத் தேர்வுகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள்.

3. கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்.

4. கமநலச் சேவைகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கமநலச் சேவைகள் குழுக்கள்.

5. கமத்தொழிற் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கமத்தொழிற் காப்புறுதிச் சபை.

6. இலங்கை வான் சேவை (கூட்டிணைத்தற்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வான் சேவை.

7. அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அணுசக்தி அதிகாரசபை.

8. ஆயுள்வேதச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆயுள்வேத மருத்துவப் பேரவையும் ஆயுள்வேத கல்லூரியும் ஆசுப்பத்திரிச் சபையும் ஆயுள்வேத ஆராய்ச்சிக் குழுவும்.

9. இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி.

10. மூலதன வரிச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளர் சபைகள்.

11. இறப்பர் கட்டுப்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மேன்முறையீட்டுச் சபைகள்.

12. பாதுகாப்பு நிலையங்கள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டுச் சபைகள்.

13. தென்னை அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சபைகள்.

14. காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மீளாயவுச் சபை.

15. வாடகைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மீளாய்வுச் சபை.

16. புத்த சாவகர் தருமபீடச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புத்த சாவகர் தரும பீடம்.

17. இலங்கை கட்டளைகள் பணியகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் பணியகம்.

18. பணச்சட்டம் பற்றிய சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி.

19. நாடுநகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய திட்டமிடல் ஆணைக்குழு.

20. இலங்கை மின்சாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரசபை.

21. இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம்.

22. இலங்கை அறிவியல், கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கை அறிவியில, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகம்.

23. இலங்கைத் தேசிய கைத்தொழிற் கூட்டகச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கைத் தேசிய கைத்தொழிற் கூட்டகம்.

24. இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைகள் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நூல்நிலையச் சேவைகள் சபை.

25. இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

26. இலங்கைப் புகையிரதக் காவலர்களதும் புகையிரத ஓட்டிகளதும் நலன்புரிச் சங்க (கூட்டிணைத்தற்) சட்டம்.

27. இலங்கைக் கப்பற்றொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கப்பற்றொழில் கூட்டுத்தாபனம்.

28. சிலோன் அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சிலோன் அரசப் பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம்.

29. இலங்கை உல்லாசப் பிரயாணச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை.

30. தென்னந்தும்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தென்னந் தும்புச் சபை.

31. கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல் அபிவிருத்தி செய்தற் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு மாவட்ட (தாழ்ந்த இடப்பரப்புகள்) மீட்டல் அபிவிருத்தி செய்தற் சபை.

32. விசேட இடப்பிரதேச (கொழும்பு) அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு விசேட இடப் பிரதேச அபிவிருத்திச் சபை.

33. பழையுண்டியல் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நட்டஈட்டுச் சபை.

34 இலங்கை அரச ஈட்டு, நிதிகள் (திருத்தச்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நியாயசபை.

35. மக்கள் வங்கி (வளவுகளைக் கொள்ளுதல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நியாயசபை.

36. கடன்சபைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கடன்சபை ஆணையாளர்கள்.

37 தொழிற்பொறுப்பு முயற்சிகள் (கொள்ளுதல்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, அத்துடன் அச்சட்டத்தின்கீழ் உரித்தாக்கப்பட்ட அல்லது கொள்ளப் பட்ட தொழிற்பொறுப்பு முயற்சிகள்.

38. பல்சமயக் கூட்டவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்சமயக் கூட்டவை.

39. கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு.

40. கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

41. இலங்கை அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள்.

42. அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள்.

43. அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள்.

44. கடன் இணக்கச்சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட இலகு கடன் இணக்கச்சபை.

45. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

46. அரசாங்கம உதவியளிக்கும் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்கம் உதவியளிக்கும் கூட்டுத்தாபனங்கள்.

47. கமத்தொழில் விளைபொருட்கள் (உத்தரவாத விலைகளும்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உத்தரவாதவிலைகள் மதியுரைக்குழு.

48. ஓமியோபதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஓமியோபதிப் பேரவை.

49. கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கைத்தொழில் மதியுரைப் பேரவை கைத்தொழில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை.

50. கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தொழில் உற்பத்திப் பொருட்கள் ஒழுங்குபடுத்தற் சபை.

51. பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம்.

52. இலங்கை எந்திரவியலாளர் நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட எந்திரவியலாளர் நிறுவகம்.

53. அளவீடுசெய்தல் வரைபடம் ஆக்கல் நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அளவீடு செய்தல் வரைபடம் ஆக்கல் நிறுவகம்.

54. ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஆயுடகாப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

55. கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தொழில் நியதிசபைகள்.

56. வரையறுக்கப்பட்ட இலங்கைச் சலுசல.

57. மகாவலி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்திச்சபை.

58. பாற்சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பாற்சபை.

59. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்கூபுச் சட்டதத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பள்ளிவாசல்கள், முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்கூபு சபை.

60. தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய தொழிற் பயிற்சிச்சபை.

61. தேசிய லொத்தர் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை.

62. தேசிய திட்டமிடற் பேரவைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தேசிய திட்டமிடற் பேரவை.

63. தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி.

64. இலங்கைத் தேசிய அறிவியற் பேரவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய அறிவியற் பேரவை.

65. வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தேசிய நல்வாழ்வுச் சபை.

66. தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் பேரவை.

67. நிந்தகமக் காணிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிந்தகமக் காணிகள் சபை.

68. நெற் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்படட நெற்சந்தைப் படுத்தற்சபை.

69. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள்.

70. ஆட்களைப் பதிவுசெய்தற் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆட்களைப் பதிவு செய்யும் நியாயசபை.

71. பதிவுசெய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள்.

72. கடை அலுவலக ஊழியர்கள் (ஊழியரும் வேதனமும்) சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட வேதன நியாயசபைகள்.

73. வாடகைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட வாடகைச் சபைகள்.

74. உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வாடிவீடுகள், தேசிய விடுமுறை உல்லாசத் தலங்கள், அதிகாரசபைகள்.

75. ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை.

76. இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மதியுரைச் சபை.

77. கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கப்பற்றொழில் முகவர்கள்.

78. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

79. இலங்கைப் புத்தாக்குநர்க்கான ஊக்குவிப்புகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு.

80. போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையும் பிரதேச போக்குவரத்துச் சபைகளும்.

81. இலங்கைச் சாகித்திய மண்டலச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட இலங்கைச் சாகித்திய மண்டலம்.

82. இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபை.

83. அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்.

84. அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.

85. அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கி.

86. அரச அச்சகக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப பட்ட அரச அச்சகக் கூட்டுத்தாபனம்.

87. தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேயிலை மதியுரைச் சபை.

88. தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

89. தேயிலை, இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடப்படுதலைக் கட்டுப்படுத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேயிலை, இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடப்படுதலைக் கட்டுப்படுத்தல்) சபை.

90. லோகோர் சீமாட்டி கடன்நிதிய (நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைச்) சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட லோகோர் சீமாட்டி கடன்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

91. தெங்குப் பொருட் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தென்னஞ் சபை.

92. தென்னை ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தென்னை ஆராய்ச்சிச் சபை.

93. கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்.

94. உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச்சேவை ஆலோசனைச் சபையும் உள்ளூராட்சிச சேவை ஒழுக்காற்றுச் சபையும்.

95. உள்ளூர் கடன்களும் அபிவிருத்தியும் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட உள்ளூர்க்கடன், அபிவிருத்தி ஆணையாளர்கள்.

96. பணச்சட்டம் பற்றிய சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மத்திய வங்கியின் பணச் சபை.

97. மக்கள் வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி.

98. இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட துறைமுக அதிகாரசபை.

99. இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட இறப்பர் ஆராய்ச்சிச் சபை.

100. இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச்சபை.

101. மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட போக்குவரத்து மேன்முறையீடுகள் நியாயசபை.

102. ஊழியர் சகாயநிதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மேன் முறையீட்டு நியாயசபை.

103. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்.

104. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, மேன்முறையீட்டுச் சபை அத்துடன் ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனங்களும்.

105. விலங்கறுவை வைத்தியர்களும் தொழிலர்களும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இலங்கை விலங்கு மருத்துவப் பேரவை.

106. நீர்வளச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நீர்வளச் சபை.

107. கைம்பெண் (விதவைகள்), அநாதை ஓய்வூதியத் திட்டச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கைம்பெண், அநாதை (ஆயுதந்தாங்கிய படைகள்) ஓய்வூதியத்திட்டம்.